# உதயன்

சுடர் : 36 | கதிர் : 259 | சனிக்கிழமை | ஆடி 29 ஆம் நாள் 14 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## அமைச்சருக்கும் மங்களவுக்கும் கொவிட் தொற்று

கொழும்பு, ஓக. 14
இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. தொற்று ஏற்பட்டுள்ளதையடுத்து மருத்துவ

19



# நாட்டை முடக்க கோத்தா மறுப்பு

- மாகாண முழுநேரப் பயணக் கட்டுப்பாடு நேற்று முதல் இரு வாரங்களுக்கு நடைமுறை
- பொதுப்போக்குவரத்து இடைநிறுத்தம்
- செப். 15 க்குப் பின் தடுப்பூசி அட்டை பரிசோதனை

கொழும்பு, ஓகஸ்ட் 14
இலங்கையில் சடுதியாக அதிகரித்துவரும் கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரம் மற்றும் தாறுமாறாக எகிறும் இறப்புகளையடுத்து நாட்டை முற்றாக முடக்குமாறு சுகாதார நிபுணர்கள் முன்வைத்த வேண்டுகோளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அடியோடு நிராகரித்துள்ளார்.

19

## குளவி கொட்டி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 14
புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தில், கருங்குளவி கொட்டியமையால் காயமடைந்த நபர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.
இதே பகுதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம்

19

## நாட்டை முடக்கத் தவறுவது படுகொலைக்கு சமனானது!

சமூக மருத்துவத்துறை விசேட நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 14
"நாட்டை உடன் முடக்கிக் கொரோனா இறப்புகளைத் தடுக்கத் தவறும் பட்சத்தில் நாட்டில் கொரோனாப் படுகொலையே இடம்பெறும்." என்று சமூக மருத்துவத்துறை விசேட நிபுணர் பேராசிரியர் சுனெத் அகம்பொடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இந்த விடயத்தில் இப்போது தீர்மானம் எடுக்காது பொறுப்பை தட்டிக்கழிப்பதும், அதன் மூலமாக மக்களைக் காப்பாற்றாது போவதும் ஒரு விதத்தில் படுகொலைக்குச் சமமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

19

## மின்சாரம் தாக்கி சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 14
யாழ்ப்பாணம் திருநெல்வேலி, பாற்பண்ணை பகுதியில் புதிய கட்டடம் ஒன்றில் மின்னிணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த சிறுவன் ஒருவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரி

19



நல்லூரானுக்கு நேற்று கொடி ஏறியது...

## கொரோனா சாவு 155 தொற்று 3,142 பேர்

கொழும்பு, ஓக. 14
இலங்கையில் மேலும் 155 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்

19

## அரசுக்கு எதிராக கறுப்புக்கொடி போர்

அறிவித்தார் கொழும்பு பேராயர்

கொழும்பு, ஓக. 14
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் நடைபெறும் விசாரணைகளில் திருப்தி இல்லை. உண்மை கண்டறியப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், அரசு தமது பயணத்தை

17

## கொவிட் தொற்றால் யாழில் 6 பேர் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 14
யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மேலும் 6 பேர் கொவிட்19 தொற்று நோயால் உயிரிழந்தனர்.
கொரோனா தொற்றுக்கு உள்ளான குடும்பப் பெண் நேற்று உயிரிழந்துள்ளார். மறவன்புலவு வேலம்பிராய் பகுதியைச் சேர்ந்த

19

## தொற்றாளர் தொகை திட்டமிட்டுக் குறைப்பு

பின்னணியில் பெரும் புள்ளிகள் அம்பலப்படுத்திய அரச பங்காளி

கொழும்பு, ஓக. 14
கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்பான தகவல்கள் திட்டமிட்ட அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளன. தொற்றுநோய் பிரிவின் இரு விசேட மருத்துவர்களும், உயர்மட்ட இராணுவ அதிகாரி

19

## கரைச்சி பிரதேச சபையின் சுகாதார ஊழியர் திடீரென வீழ்ந்து சாவு

கிளிநொச்சி, ஓக. 14
கிளி. கரைச்சி பிரதேச சபை தொழிலாளர் ஒருவர் திடீரென வீதியில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கிளிநொச்சி உதயநகர் கிழக்கு

19

## சுதேச சிகிச்சை பெறுகின்ற தொற்றாளர்கள் சாகவில்லை

ஆயுள்வேத திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 14
உள்நாட்டு சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட எந்தவொரு கொரோனாத் தொற்றாளர்களும் உயிரிழக்கவில்லை என ஆயுள்வேத திணைக்களம் தெரிவித்துள்ளது.
மேலும், ஆயுள்வேத வைத்தியசாலைகளில்

19

## எம்மை ஏய்க்காட்டவா குழு நியமித்துள்ளீர்கள்?

அரசிடம் ஆசிரிய சங்கம் கேள்வி

கொழும்பு, ஓக. 14
அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக அரசு அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்துள்ளது. ஆனால், எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை." என்று இலங்கை ஆசி

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்
# 45 பேருக்கு கொரோனா


வவுனியாவில் 45 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில், வேப்பங்குளம், சிறிராமபுரம், தெற்கிலுப்பைக்குளம், காத்தார்சின்னக்குளம், பறநட்டாங்கல், வைரவபுளியங்குளம், நொச்சிமோட்டை, புளியங்குளம், ஒலுமடு, கல்மடு, தவசிகுளம், நெளுக்குளம், கீரிசுட்டான், குளவிசுட்டான், குருந்துவப் பிட்டிய, நெடுங்கேணி, குடியிருப்பு ஆகிய பகுதிகளில் தலா ஒருவருக்கும், ஆரா நிறுவனம், பெரியஉளுக்குளம், கொக்கலிய, ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளில் தலா இருவருக்கும், சின்னப்புதுக்குளம் பகுதியில் மூவருக்கும், இறம்பைக்குளம், கோவில்புதுக்குளம், பண்டாரிக்குளம், சிறிநகர் ஆகிய பகுதிகளில் தலா நான்கு பேருக்கும், நேரியகுளம், தோணிக்கல் ஆகிய பகுதிகளில் தலா ஐவருக்கும் என 45 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (த-18)

# உத்தியோகபூர்வ தொகையைவிட கொவிட் தொற்றாளர்கள் அதிகம்

## கூறுகின்றனர் முன்களப் பணியாளர்கள்



**கொழும்பு, ஓக. 14**

**கொவிட் நோய்த்தொற்றுக்கு உள்ளாகும் நோயாளர்கள் குறித்து அரசு உத்தியோகபூர்வமாக ஊடகங்களுக்கு அறிவிக்கும் எண்ணிக்கையில் குறைபாடு உள்ளது என்று தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் முன்னரங்கில் நிற்கின்ற பணியாளர்கள் கூறுகிறார்கள்.**

தினசரி மேற்கொள்ளப்படுகின்ற அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர். சோதனைகளின் அடிப்படையில் நோக்கும்போது தொற்றுக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை சுமார் 4 ஆயிரமாக இருக்கிறது. ஆனால், 2ஆயிரத்து 500 தொடக்கம் 2ஆயிரத்து 900 வரையானவர்களே தொற்றுக்குள்ளாகின்றனர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுகிறது என்று மருத்துவர்கள் ஊடகங்களுக்கு கூறுகிறார்கள்.

தற்போதைய தொற்று வேகத்தை அடிப்படையாக கொண்டு நோக்கும்போது எதிர்வரும் நாள்களில் தினசரி தொற்றுக்கிலக்காவோரின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை தாண்டக்கூடும். இது சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (த-இ)

# வல்லிபுர ஆழ்வார் திருவிழாவில் சுகாதார நடைமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

நாட்டில் கொரோனாத்தொற்று நோய் அபாயநிலை நிலவும் சூழலில் ஆரம்பமாகவுள்ள ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மகோற்சவ பெருந்திருவிழாவை சுகாதார முறைப்படி நடத்த தீர்மானிக்கப்பட்டது.

மகோற்சவகால ஏற்பாட்டுக் கூட்டம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் நேற்று நடைபெற்றது. அதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இந்த வருடம் மகோற்சவம் நடத்துவதற்கு அனுமதி இல்லை.

பூசைகள் பக்தர்களின் பங்குபற்றுதல் இன்றி நடைபெறும். சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் மதத்தலைவர்கள் உட்பட 100 அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

கோவில் உள்வீதியில் மட்டுமே பூஜைகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் வெளிப்புறச் சூழலில் எந்தவிதமான சமய நிகழ்வுகள் கலை நிகழ்வுகள் மற்றும் நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல் என்வற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தவருடம் விசேட தனியார், அரசு போக்குவரத்து சேவை இடம்பெறுவதற்கு அனுமதி இல்லை.

கோவில் சுற்றாடலில் வீதிகளில் மண்டகப்படிவைத்தல், பிரசாதம் வைத்தல், தாக சாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றவை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் நிலவுகின்ற கொவிட்-19 அசாதாரண சூழ்நிலையில் அங்கப்பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி, தூக்குக்காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்களின்போது கொரோனா கட்டுப்பாடு தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாக கடைப்பிடிக்க முடியாத சூழல் ஏற்படுவதால் இந்தவருடம் மேற்படி நேர்த்திக் கடன்களை கோவில் வளாகத்திலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

கோவில் சுற்றாடல் மற்றும் கோவிலை அண்மித்த பகுதியில் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், கலைநிகழ்வுகள் மற்றும் பொழுதுபோக்குக்கான அனைத்து நிகழ்வுகளும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே கோவில் சூழலில் இயங்கிவந்த இரண்டு கடைகள் மாத்திரம் தொடர்ந்தும் இயங்கி வருவதற்கு அனுமதிக்கப்படும்.

எனினும், இயங்கிவரும் வியாபார நிலையங்களை விரிவாக்க அனுமதி இல்லை.

கோவில் சூழலிலுள்ள வெற்று காணிகளிலோ அல்லது கட்டடங்களிலோ புதிய கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் நடமாடும் வியாபாரமும் அனுமதிக்கப்படமாட்டாது.

கோவில் பூசைகளின்போது சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்து பாதைகள் தடைப்படுத்தப்படும்போது பிரயாணிகள் மாற்றுவழிப்பாதையை பிரயோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுகாதார அமைச்சால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுகாதார சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள், அத்துடன் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் மற்றும் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோரால் கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளை கருத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட அறிவுறுத்தல்களை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பூசைகாலங்களில் கோவில் சுற்றாடல்களில் இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பக்த அடியார்கள் தங்கள் வீடுகளில் இருந்து மாயவனை வணங்கி அருள் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம். -என்றுள்ளது. (த-26)

# தொற்றாளர் தொகையை மறைக்கின்றது அரசு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 14

கொவிட்-19 தொற்றுநோய் பற்றிய உண்மை நிலைவரத்தை அறிவதற்கு நாட்டு மக்களுக்கு இருக்கும் உரிமையை அரசு மீறுகின்றது. குறித்த விவரங்களை நேர்மையற்றமுறையில் பயன்படுத்துகின்றது என்றும் அரசு மீது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) குற்றஞ்சாட்டியிருக்கிறது.

தொற்றுநோய் தொடர்பான உண்மைத் தரவுகளையும் தகவல்களையும் மக்களும் தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்புக்களும் அறிந்துகொள்வது அவசியமாகும் என்று ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

கொவிட் செயலணியாலும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களாலும் வெளியிடப்படுகின்ற தரவுகளிலும் தகவல்களிலும் முரண்பாடுகள் இருக்கின்றன. இது பாரதூரமான விடயமாகும். கம்பஹா மாவட்டத்தில் கொவிட் நோயாளர்கள் பற்றிய தரவுகளில் முரண்பாடொன்று உள்ளது என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. கொவிட் இறப்புகள் பற்றிய புள்ளிவிவரங்களை நாம் சந்தேகிக்கின்றோம்.

கொவிட் செயலணி சுகாதார அமைச்சின் ஊடாக தரவுகளை எடுக்கின்றது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அல்லது கொவிட் செயலணியால் தவறான தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

சுகாதார அதிகாரிகளாலும் மருத்துவ நிபுணர்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற சிபாரிசுகளின் அடிப்படையில் அரசு தீர்மானங்களை எடுக்கவில்லை என்றும் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (த-இ)

# கட்சித்தலைவர்களுக்கு திங்கட்கிழமை கூட்டம்

கொழும்பு, ஓக. 14

நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுக்கு அவசர கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் தலைமையில் எதிர்வரும் திங்கட்கிழமை கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

தற்போதைய கொரோனா நிலைமையில் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் கலாசார மண்டபத்தை மீள ஒப்படைக்குமாறு கோரிக்கை

## யாழ். மாநகர சபையிடம் முன்வைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.14

'நாவலர் கலாசார மண்டபம் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமானது. அதனை அவர்களிடமே ஒப்படைத்துவிடுங்கள்' என்று சமயத்தலைவர்களும், கல்விமான்களும் யாழ்ப்பாண மாநகரசபையிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தெரிவிக்கையில்,

" இந்த மண்டபம் அமைக்கப்பட்டதன் நோக்கம் இன்றுவரை நிறைவேறவில்லை. இது நம்மவரே நாவலரின் ஆத்மாவை வேதனைப்பட வைக்கும் விடயம். நாவலர் கலாசார மண்டபம் யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகத்தால் இப்போது பராமரிக்கப்பட்டு வருகிறது. மண்டபத்துக்கு உரியவர்கள் அதனை ஒரு நல்ல நோக்கத்துக்காக மீண்டும் கோருகிறார்கள். உரியவர்களிடமே அதனைக் கொடுப்பது சாலச்சிறந்தது." என்று தெரிவித்துள்ளார்.

சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர், கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவிக்கையில்,

"நாவலர் பிறந்த மண்ணில் நாவலருக்குரிய பணிகளை அவருடைய நினைவு மண்டபத்திலே முன்னெடுப்பதற்கு நம்மவரே தடையாகவிருப்பதென்பது 'நம்மவரே என்னைக் கண்ணீர் சிந்தவைத்தனர்' என்று நாவலரே தன் வாயாற்சொல்லி வேதனைப்பட்டதை நினைவுகூர்வதாய் உள்ளது. உரியமுறையில் அவர் பணிகளை முன்னெடுக்க மண்டபத்தைத் திணைக்களத்திடம் வழங்குங்கள்" என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தெரிவிக்கையில்,

"நாவலரின் எண்ணங்கள் நம்மவர் ஒற்றுமையில் நிலைக்கவேண்டும். எங்களுடைய சமூகம் மீண்டெள நாவலரைப் பற்றுக்கோடாய்க் கொள்ளவேண்டும். உணர்ச்சியோடு பலரும் பேசலாம். அவை செவிக்கு இன்பமூட்டுவதாகவும் அமையலாம். தமிழ் வாழ வேண்டும் என்று விரும்பினால், தமிழர்கள் இங்கே வாழவேண்டும். அதுபோல நாவலருடைய எண்ணங்கள் ஈடேறவேண்டும் என்றால் அவருடைய சேவைகளுக்குச் செயலூக்கம் தரவேண்டும். நம்மவரே அதற்குத் தடையாக இருப்பது நன்றன்று. நாவலர் வழிகாட்டிய பணியைத் தீவிரப்படுத்த இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முனைப்புக்காட்டுகிறது. அவர்களின் செயலூக்கத்துக்கு உந்துசக்தியாக இருங்கள். திணைக்களத்திடம் உரியமுறையிற் கலாசார மண்டபத்தை ஒப்படைத்து நீங்களும் ஒரு பங்காளியாயிருந்து செயற்படுங்கள். என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க.சிற்றம் பலம் தெரிவிக்கையில்,

"அற்ப சலுகைகளுக்கு விலைபோகாத செந்நெறியாளன் -ஈழத்திற் தோன்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். அவரது சேவை என்றும் நினைவுகூரப்படவேண்டுமென்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட மண்டபம். இன்றுவரை நின்றுபோன கதையாகவே உள்ளது. வரலாறு ஆரம்பித்த காலம் முதல் நம் இனமே எமது முன்னேற்றத்துக்கான தடைக்கல் என்பதில் மட்டும் இன்றுவரை ஒற்றுமை நிலவுகிறது. நிபந்தனைகளோடு வழங்கப்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தை மீளவும் அதற்குரிய அரச நிர்வாகம் நியாய பூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்கப் பல தடவைகள் கோரியிருந்தது. இதனால் எந்தப் பலனும் இல்லை. வழங்குவதற்கு எது தடை என்பது புரியவில்லை என்றார்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிக்கையில்,

"இந்துமாமன்றத்தின் சார்பில், நாவலரின் புனிதமான நினைவு மண்டபம் ஆன்மிகச் சூழலில் நல்லமுறையில் இதுவரை பேணப்படவில்லை. நாவலரின் மண்டபத்தில் அவரது ஒரு புகைப்படங்கூட இல்லை. நாவலரின் மண்டபம் என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ அவையெதுவும் நிகழ்ந்தேறவில்லை. தொல்லியல் அரும்பொருட் காட்சியகத்துக்கு வரும் சுற்றுலாப் பிரயாணிகள் இங்கு வைத்து அசைவ உணவுகள் உட்கொள்ளுவது அடிக்கடி நிகழும் விடயம். இந்த அவலங்கள் தொடராது மண்டபத்தைத் திணைக்களத்தி டம் ஒப்படையுங்கள் என்றார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சின்னத்துரை தனபாலா தெரிவிக்கையில்,

"கிழக்கிலங்கையில் இன்று புனிதமாகப் போற்றப்படும் விபுலானந்தர் நினைவிடம் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின், பெருஞ்செலவிலான சீரமைப்பில், ஆன்மிகச்செழுமையோடும் வரலாற்றுப் பெருமையோடும் நிமிர்ந்து நிற்கிறது. திணைக்களத்துக்கு உரிமமில்லாத இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி அந்தத் திணைக்களத்தால் சீரமைக்கப்பட்டமைக்கு எமக்கு வழிகாட்டிய ஆன்மிகவாதிகளின் நினைவிடங்கள் என்றும் பூஜிக்கப்படவேண்டியவையே என்பது மட்டுந்தான் காரணம். அவர்களின் உயர்ந்தவெண்ணம் இன்று நம்மனைவருக்கும் பெருமை சேர்த்திருக்கிறது. ஆனால் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான நாவலர் கலாசார மண்டபம் வெறும் பெயரோடு மட்டும் கட்டடமாக நிற்கிறது. இதற்கான தடைக்கல் யார்? இது வரலாற்றுத் தவறு என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். தயவுசெய்து மண்டபத்தைத் திணைக்களத்திடம் ஒப்படைத்துவிடுங்கள் - என்றார். (ஐ)




# ஆலயத்துக்குச் செல்வதை மக்கள் தவிர்க்க வேண்டும்

## யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 14

நல்லூர் ஆலயத்துக்குச் செல்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனவே ஆலயத்துக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லியனகே பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 25 நாள்கள் திருவிழா நடைபெறவுள்ள நிலையில், நல்லூர் உற்சவ கால பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றுத் தீவிரமாக உள்ளது. இந்த நிலைமையில் ஆலயத் திருவிழாக்கள் தொடர்பாக சுகாதார அமைச்சால் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுக்கு அமைவாக நல்லூர் ஆலய உற்சவத்தை பாதுகாப்பான முறையில் எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுத்துள்ளோம். நல்லூர் ஆலய வளாகத்துக்குள் ஆலய நிர்வாகத்தால் அடையாள அட்டை வழங்கப்பட்டோர் மாத்திரம் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். வேறு எவரும் ஆலய வளாகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் ஆலயத்துக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நேரடியாக ஒளிபரப்பப்படும் உற்சவங்களை வீட்டில் இருந்து பார்த்து, தரிசியுங்கள். இதன்மூலம் தொற்றில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். என்றார். (எ-26)







# கொடியேற்றத்தை காணத் தடை பொலிஸாருக்கு மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 14

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள நிலையில், ஆலயத்துக்குச் சென்ற பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே முறுகல் நிலைமை ஏற்பட்டது.

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக திருவிழாவில் மட்டுப்படுத்தப்பட்ட அளவினரே கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். மக்களின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்காக ஆலயத்துக்குச் செல்லும் அனைத்து வீதிகளிலும் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வீதியில் [illegible] பொலிஸார் தமது வாகனத்தை நிறுத்தி தடை ஏற்படுத்தியிருந்தனர். அதனால் பொதுமக்களுக்கு ஆலயத்தைத் தரிசிக்க முடியாத நிலைமை காணப்பட்டது. அதற்கு பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் பொலிஸாருக்கும், மக்களுக்கும் இடையே முறுகல் நிலைமை ஏற்பட்டது. மக்கள் வீதியில் அமர்ந்திருந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

பொதுமக்கள் வீதியில் தேங்காய் உடைத்து, கற்பூரம் கொளுத்தி வழிபட்டனர். சற்றுநேரம் அந்த இடத்தில் பதற்ற நிலைமை காணப்பட்டது. (எ-26,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு அதிகாரமோக நோயால் மக்களை கைவிட்டு விட்டது

## எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

**கொழும்பு, ஓக. 14**

**நாடு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு அதிகார மோகம், மாயை, ஆணவம் மற்றும் பொறுப்பற்ற தன்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், நாட்டு மக்களே இதனால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இந்தச் சூழ்நிலையில், பொறுப்புவாய்ந்த அமைச்சர் ஒருவர், எதிர்காலத்தை கடவுளிடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆரம்பம் முதலே அரசு இந்தக் கொரோனாத் தொற்றை தமது சொந்த அரசியல் திட்டமாக மாற்றியதாகக் குறிப்பிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர், அரசு கொரோனாவைத் தோற்கடித்ததாக பெருமையுடன் எவ்வாறு தேர்தல் பரப்புரை மேற்கொண்டது என்பதை மக்கள் நினைவில் கொண்டிருப்பர் எனவும் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனாத் தடுப்பூசியை முற்கூட்டியே பதிவு செய்யுமாறு நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் அரசைப் பல தடவைகள் கேட்டுக்கொண்டோம்.

இராஜதந்திர மட்டத்தில் பல்வேறு இராஜதந்திரிகளைச் சந்தித்து இலங்கைக்குத் தேவையான தடுப்பூசியை வழங்குவதற்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறு நாம் கோரினோம்.

எனினும், அரசு அவையனைத்தையும் நிராகரித்து அதற்குப் பதிலாக தம்மிக்க பாணியை ஊக்குவித்தது. அந்தப் பாணியை நாடாளுமன்றத்துக்கும் அரசு கொண்டுவந்தது.

நாடாளுமன்றத்தின் சில அமைச்சர்கள் பாணிக்கான பரப்புரை முகவர்களாக மாறினார்கள்.

சில அமைச்சர்கள் ஆறுகளில் முட்டிகளை இட்டு பிரபல்யமாக்கியதுடன், மூட நம்பிக்கைகளை சமூகமயப்படுத்தினார்கள்.

தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்தபோது, தொற்று சமூகப் பரவலாகி விட்டது.

தடுப்பூசியை சரியான நேரத்தில் பெற்றுக்கொள்வது, நிதி ஒதுக்கல், மனித வளங்களைப் பயிற்றுவித்தல், தடுப்பூசிகளை விநியோகித்தல், திட்டமிடுதல் மற்றும் முன்னுரிமையளிப்பது தொடர்பான தெளிவான திட்டத்தை நாம் முன்வைத்த போதிலும் அரசிடம் அத்தகைய திட்டம் இருக்கவில்லை.

கனடா போன்ற நாடுகள் ஒரு குடிமனுக்கு பல தடுப்பூசிகளை ஒதுக்கியுள்ளதால், இன்னும் அந்த நாடுகளில் அவை மேலதிகமாகக் காணப்படுகின்றன.

எனினும், எமது நாட்டில் இதுவரை ஒரு தடுப்பூசியைக் கூட பெற்றுக் கொள்ளாதவர்கள் உள்ளனர். நாம் முற்கூட்டியே கூறிய அனைத்தும் நிறைவேறியுள்ளது.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரில் 80 வீதத்துக்கும் மேற்பட்டோர், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் இந்தப் பிரிவினருக்குத் தடுப்பூசிக்கான முன்னுரிமையளிக்க வேண்டியிருந்தது.

ஆரம்பம் முதலே தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டில் அரசு அரசியலைப் பிணைத்துக் கொண்டது.

தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் அரசு முன்வைக்கும் அறிக்கைகள் முரண்பாடாக உள்ளன.

கொரோனாத் தொற்றைத் தோற்கடித்த அனைத்து நாடுகளும் தடுப்பூசியின் மூலமே அதனை மேற்கொண்டுள்ளன.

ஒவ்வொரு நாடும் இந்தப் பணியை சுகாதார நிபுணர்களிடம் ஒப்படைத்த போதிலும், இலங்கையில் அத்தகைய நிபுணர்களை ஒதுக்கிவிட்டு அரசின் விருப்பத்துக்கேற்ப தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

வைத்தியர் மலித் பீரிஸ், வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம, வைத்தியர் அனில் ஜாசிங்க, வைத்தியர் ரவி ரணன்எலிய உள்ளிட்ட நிபுணர்களின் ஆலோசனைகளை அரசு புறக்கணித்ததுடன் குறைந்தபட்சம், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய வைரஸ் தொடர்பான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் ஆலோசனையைக்கூட ஏற்கவில்லை, என்றுள்ளது.

(ஒ-22)


## வட்டார உறுப்பினராக யேசுராஜன் பதவியேற்பு

கிளிநொச்சி, ஓக. 14

கரைச்சி பிரதேச சபையின் உதயநகர் வட்டார உறுப்பினராக அருளானந்தம் யேசுராஜன் பதவியேற்றுள்ளார்.

கிளிநொச்சி உதயநகர் வட்டாரத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் முருகேசு சிவஞானசுந்தரமூர்த்தி சுகயீனம் காரணமாக விலகியதை அடுத்து அவருக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஜ-6)



## வாகன வரிப்பத்திரம் வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தம்

சாவகச்சேரி. ஓக. 14

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுவந்த வாகனங்களுக்கான வரிப்பத்திரம் வழங்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட போக்குவரத்து திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரமே இப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், மீண்டும் செயற்படுத்தும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொரோனாத் தொற்று நிலைமையிலும், மக்களின் நலன்கருதி கடந்த 3 மாதங்களாக பிரதேச மோட்டார் போக்குவரத்து அலகினரால் தினமும் 200 பேருக்கு வாகன வரிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டு வந்தது.

தற்போது காணப்படும் தொற்று அதிகரிப்பின் காரணமாக குறித்த பணியை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மறு அறிவித்தல் வரை குறித்த அலகு மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-9)

### சுகாதாரப் பகுதியால்

# வழிபாட்டுக்கு வழங்கப்படும் அனுமதிகளை மீறிச் செயற்படும் ஆலய நிர்வாகங்கள்

## சமூக ஆர்வலர்கள் கவலை

யாழ்ப்பாணம் ஓக. 14

யாழ். மாவட்டத்தில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அந்தந்த சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினால் கோவில்களுக்கு வழங்கப்படும் நிபந்தனையுடனான அனுமதியை கோவில் நிர்வாகத்தினரும் திருவிழா உபயகாரர்களும் மீறுவது குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்.

மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் கொரோனாவால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஊடகங்கள் மூலம் அனைவரும் அறிந்ததே.

இந்த நிலையில் கடந்த வருடத்தைப் போல கோவில் வருடாந்த உற்சவங்களை நிறுத்தாமல் நடத்துவதற்கு சுகாதார பிரிவினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

குறிப்பிட்ட அளவான அடியார்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும், அன்னதானம், காவடிகள் என்பன வற்றுக்குத் தடை, கோவில் வெளி வீதியில் சுவாமி உலாவருதல் தடை உள்ளிட்ட நிபந்தனைகளுடன் சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்கினர்.

இவ்வாறான நிலையில் அனுமதி பெற்ற ஆலய நிர்வாகத்தினர் அவற்றை கடைப்பிடிப்பதில்லை.

இவ்வாறான செயற்பாடுகளை சுகாதாரப் பகுதியினரால் வழங்கப்படும் அனுமதியை அவமதிக்கும் செயலாக கருத முடிகிறது.

ஒரு பிரதேசத்தில் கோவில் திருவிழாக்களில் பங்குபற்றிய பலர் தொற்றுக்கு இலக்காகியமை இதற்கு உதாரணமாகும்.

மக்கள் தம்மைத்தாமே பாதுகாக்கத் தவறின் அனைவரும் கொரோனா தொற்றுக்கு இலக்காக கோவில்கள் வழிவகுக்கும் என்றனர்.

(ஜ 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இதற்குப் பெயர் பக்தியா?

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொரோனா பெருந்தொற்றைக் கருத்தில்கொண்டு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் சுகாதார நடைமுறைகள் இம்முறை இறுக்கமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அவை எவற்றையும் இம்மியும் சட்டைசெய்யாது ஆலயத்தின் வீதிகளில் பெருந்திரளில் பக்தர்கள் ஒன்றுகூடினார்கள். அதிலும் குறிப்பாக இளைஞர்களுக்கு புத்திமதி சொல்லி அவர்களை இந்த கொவிட் காலத்தில் மனக்கட்டுப்பாட்டுடன் நடத்த வேண்டிய பெரியவர்கள்தான் இந்த 'சமூக விரோத' செயலில் ஈடுபட்டனர் என்பது கவலைக்குரிய விடயம்.

நல்லூர் பெருந்திருவிழாவில் பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பது நேற்றுமுன்தினம் இரவிரவாக ஆலோசித்து நேற்றுக்காலை அவசர அவசரமாக அறிவிக்கப்பட்ட விடயம் அல்ல. இரு தினங்களுக்கு முன்னரே திட்டவட்டமாக அறிவிக்கப்பட்ட நிலைப்பாடு அது. மாநகர சபையும் கோவில் நிர்வாகமும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை முழுமையாகவும் தெட்டத்தெளிவாகவும் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்திய பின்னர் இந்த ஒன்றுகூடல்கள் ஏன்?. உண்மையில் இதை பக்தியின் வெளிப்பாட்டுப் பிரவாகம் என்று கொள்ள முடியாது. பக்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என்று தெரிவித்து சில கோவில் திருவிழாக்கள் இடைநடுவில் கைவிடப்பட்டு கோவில்கள் 14 நாள்களுக்கு பூட்டப்பட்டமை மிகச் சமீபத்திய சம்பவங்கள். இவ்வாறிருக்கையில் அவ்வாறானதொரு நிலையை வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கும் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டவிதம் எவ்வாறு பக்தி என்ற வரையறைக்குள் வரும்?.


உள்ளமே கோவில். வீட்டில் இருந்து இறைவனைத் தியானித்து ஆலயத் திருவிழாவை எந்தக் குழப்பமும் இன்றி நடத்திவிட வேண்டும் என்பதுதான் முருகப்பெருமானிடம் அன்பும் இதய சுத்தியுடனான விசுவாசமும் இருக்கும் ஓர் உண்மைப் பக்தனின் செயற்பாடாக இருக்குமேயன்றி, கொரோனா வந்தால் வரட்டும், எத்தனை பேர் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை, ஆனால் என்னைக் கோவிலுக்குள் அனுமதித்துவிட்டால் போதும் என்று வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்துவது அமையாது.

கொரோனாப் பெருந்தொற்றை ஓரளவேனும் கட்டுப்படுத்துவதற்கு நாட்டை முடக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. அரசு மீது ஏகப்பட்ட அழுத்தங்களும் விமர்சனங்களும் இது விடயத்தில் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கேள்வி என்னவென்றால், இவ்வாறு பெருமளவில் மக்களை ஒன்றுகூடும்படி அரசுதான் சொல்லியனுப்புகின்றதா?. அத்துமீறல்களிலும் சுகாதார நடைமுறைப் புறக்கணிப்புக்களிலும் நாம்தான் ஈடுபடுகின்றோம். இவ்வாறிருக்கையில் அரசு மீது பொத்தம்பொதுவாக ஒரு விமர்சனத்தை முன்வைத்துவிட்டால் அனைத்தும் சரியாகிவிடுமா? என்ற கேள்வியை எம்மை நோக்கி நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஆலயப் பெருந்திருவிழாக்களில் மட்டுமல்ல பூப்புனித நீராட்டுவிழா, திருமண விழா, பிறந்தநாள் விழா என்பவற்றை தற்போது நடைமுறையிலுள்ள கொவிட் கட்டுப்பாடுகளுக்கு முரணாக பெருமெடுப்பில் நிகழ்த்துகின்றவர்கள் இன்றும் இருக்கின்றார்கள். சுகாதாரத்துறை அதிகாரிகளால் குறித்த நிகழ்வுகள் அடையாளம் காணப்பட்டு உரியவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமையும் கண்கூடு.

இவ்வாறான அத்துமீறல்களுக்கும் அரசின் மீதுதான் பழியைப் போட்டுவிட்டு தப்பியோடப் போகின்றோமா? இதற்கு யார் காரணம்? இந்த விதி முரண் நடவடிக்கைகளால் கொரோனா வராதா? என்பதெல்லாம் ஒன்றும் விடைதெரியாக் கேள்விகள் அல்ல.

டெல்டா தீவிரமாகின்றது, வீட்டுக்குவீடு தொற்றாளர்கள் அவதானிக்கப்படுகின்றார்கள், இறப்புக்கள் அதிகரிக்கின்றன, சுகாதார நெருக்கடி ஏற்படுகின்றது இதற்கெல்லாம் அரசு பொதுமுடக்கத்தை அறிவிக்காததுதான் காரணம் என்றில்லை. அரசின் அசமந்தமும் ஒரு காரணமாக இருக்கலாம், ஆனால் அரசு மட்டுமே காரணம் என்றில்லை. அரசின் அசண்டையீனத்தை விடவும் இந்த அதிமேதாவிகளின் அசண்டையீனம் தான் மிகமுக்கிய காரணம். இந்த அதிமேதாவிகள் தம் நடவடிக்கைகளில்கொஞ்சம்பகுத்தறிவையும்சுயகட்டுப்பாட்டையும் கொண்டுவந்தாலே நாட்டில் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைத்துவிட முடியும். ஆனால் என்ன செய்வது கெடுகுடி சொல் கேளாதே.




# கடும் நெருக்கடி நிலைமை மக்கள் ஒத்துழைப்பு தேவை

## யாழ். போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், ஜுலை 14**

**கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. மிக இக்கட்டான நிலையில் சுகாதாரத் துறையினர் உள்ளனர். மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.**

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் பவானந்தராஜா தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அனைத்து உத்தியோகத்தர்களும் மிகவும் சிரமத்தின் மத்தியில்தான் சேவைகளை முன்னெடுக்கின்றார்கள். கோப்பாயில் உள்ள இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்தில் 420 பேருக்குரிய இடவசதிகளே உள்ளன. ஆனால் தற்போது 430க்கும் மேற்பட்டவர்கள் அங்கு தங்க வைக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. இவை எமக்கு மேலதிக சுமையாகவே இருக்கின்றன.

**ஒட்சிசன் பற்றாக்குறை**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குரிய ஒட்சிசன் தேவை தற்போது இரு மடங்காக அதிகரித்திருக்கின்றது. ஒட்சிசனை இதுவரை அநுராதபுரத்தில் இருந்து பெற்று வந்தோம். தற்போது அங்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தினமும் கொழும்புக்கு வாகனம் அனுப்பி ஒட்சிசனைப் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு சிரமத்தின் மத்தியில் சேவையை வழங்கும் எமக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமானது.

**தகனத்தில் சிக்கல்**

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதிலும் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் கோம்பயன்மணல் மயானத்தில் மட்டுமே மின் தகன வசதி உள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்தும், ஏனைய மருத்துவமனைகளில் இருந்தும் இங்குதான் உடல்களைத் தகனத்துக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. கடந்த ஐந்து மாதங்களில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 140 பேர் கொரோனாத் தொற்றால் இறந்துள்ள னர். ஏனைய இடங்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை மொத்தமாக 156 பேர் உயிரிழந்துள்ளனர். மின்தகனம் மூலம் ஒரு நாளைக்கு நான்கு உடல்களே தகனம் செய்ய முடியும் என்ற நிலையில், பல உடல்கள் தேங்கியுள்ளன.

**கடும் நெருக்கடி**

மருத்துவமனையின் விபத்துப் பிரிவுக்கு தினமும் 60 தொடக்கம் 80 பேர் வரையில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களுக்கும் எமது சேவையை வழங்க வேண்டியுள்ளது. அத்துடன் கொரோனாத் தொற்றாளர்களை கவனிப்பதில் பெரும் சிரங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. பொதுமக்கள் இவற்றைக் கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். இந்த நெருக்கடிகளைக் குறைப்பதற்கான ஒரு வழி தேவையற்ற நடமாட்டங்களையும் ஆடம்பர நிகழ்வுகளையும் தவிர்ப்பதே. மக்கள் சமூகப் பொறுப்புடன் தனிநபர் இடைவெளியைப் பின்பற்றி, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிப்பது வைத்தியசாலைக்கும், சமூகத்துக்கும் செய்யும் பெரும் நன்மையாக இருக்கும் என்றார். (எ-319,26)

# குறைந்தளவு ஆயர்களுடனே மருதமடு திருவிழா திருப்பலி

மன்னார், ஜுலை 14

மருதமடு பெருவிழா திருப்பலி மிகக் குறைந்தளவான ஆயர்கள், அருட் பணியாளர்களுடன் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் மறை மாவட்டத்தில் 15ஆம் திகதி நடைபெறவிருக்கும் மருதமடு அன்னையின் பெருவிழாவில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையின் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அன்று காலை 6.15 மணிக்கு மன்னார் மாவட்ட ஆயர் இம்மானுவேல் ஆண்டகை மற்றும் அருட்பணியாளர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள் என்றும், கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏனைய மறைமாவட்டங்களின் ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்களின் வருகை தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது டோஸ் ஏற்றும்வரையாவது நாட்டை முடக்கி வைத்திருங்கள்

கொழும்பு, ஓக. 14

**இலங்கையில் தடுப்பூசி பெறுவதற்கு தகுதியான அனைவருக்கும் இரண்டாவது டோஸ் செலுத்தப்படும்வரை நாடு முடக்கப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியல்ல வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கொரோனா வைரஸ் மிக வேகமாக பரவிவருகின்றது. எனது மாவட்டமான கண்டியிலுள்ள மருத்துவர்களுடன் தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடினேன். கண்டி மாவட்டத்துக்குள் இன்னும் 'டெல்டா' வரவில்லை என்பதால், இரண்டாவது டோஸ் ஏற்றினால் கண்டி உட்பட மலைநாட்டு பகுதியை பாதுகாக்க முடியும் என்றும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டினர். எனவே, இரண்டாவது டோஸையும் விரைந்து வழங்குமாறு அரசிடம் கோருகின்றேன்.

கண்டி மாவட்டத்தில் முதலாவது டோஸை வழங்கும்போது இரண்டாவது டோஸ் அவசியமில்லை என்ற ஒப்பம் வாங்கப்பட்டது. இதனால் இரண்டாவது டோஸ் கிடைக்குமா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

நாட்டை முழுமையாக முடக்குமாறு மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர். ஆனால் மாறுபட்ட செயலில் ஜனாதிபதி செயலணி ஈடுபட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் மருத்துவர்களின் கருத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவது டோஸ் ஏற்றப்படும் வரை நாடு முடக்கப்பட வேண்டும். அனைவருக்கும் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை வழங்கிய பின்னரே முறையாக நாடு திறக்கப்பட வேண்டும், -என்றார். (ஒ-44)



## வவுனியா மாவட்டச் செயலகத்தில் 36 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

வவுனியா,ஓக.14

வவுனியா மாவட்டச் செயலகத்தில் பணியாற்றும் மூவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் 36 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மாவட்டத்திலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வரும் நிலையில், மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் மூவர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இவர்களுடன் பணியாற்றியோர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் என எழுமாறாக 36 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன் முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (ஜ-18)

## சபை உறுப்பினர்கள் இருவர் தனிமையில்

முல்லைத்தீவு,ஓக.14

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் இரு உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கள்ளப்பாட்டு பகுதியைச் சேர்ந்த உறுப்பினர் எம்.விக்னா யாழ்ப்பாணம் சுப்பர் மடப் பகுதியிலும், உறுப்பினர் ரணசிங்க ஆராசிலாகே வீரக்கோன் வெலிஓயா பிரதேசத்திலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் இந்த மாதம் நடைபெற்ற சபை அமர்வில் கலந்துகொள்ளாத நிலையில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக சபையின் தவிசாளர் தெரியப்படுத்தியுள்ளார். (ஜ-19)

கடந்த நான்கு நாள்களில்

## தென்மராட்சி பிரதேசத்தில் 110 தொற்றாளர்கள் அடையாளம்



சாவகச்சேரி, ஓக. 14

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த நான்கு நாள்களில் 110 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நேற்றுக் காலை வரை சாவகச்சேரி மருத்துவமனையிலும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்திலும் மேற்கொண்ட பி.சி. ஆர்.மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

சாவகச்சேரி மருத்துவமனையில் 41 பேரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் மற்றும் மட்டுவில், மந்துவில். வரணி, கொடிகாமம், நாவற்குழி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் 69 பேரும் அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை கொரோனாத் தொற்றால் மட்டுவில், நுணாவில் கிழக்கு, நாவற்குழி மற்றும் மீசாலை வடக்கு போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளனர். (ஜ-9)

## தடுப்பூசி ஏற்றும் இடத்தில் மாற்றம்

சாவகச்சேரி,ஓக. 14

சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்று வந்த கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்றுத் தொடக்கம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் இடம்பெறுகின்றன.

ஏற்கனவே முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றியவர்களுக்கான இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்றுடன் நிறைவடைகின்றன.

எனவே சொற்ப அளவு தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளதால் இதுவரை இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களை சுகாதார மருத்துவ அதிகாரி, பணியகம், மற்றும் கைதடி , வரணி, கொடிகாமம் ஆகிய மருத்துவமனைகளில் ஏற்றிக்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஜ-9)

மக்களின் நலன்கருதி

# கனரக வாகனத்தை திருத்தி அமையுங்கள்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.14

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மோட்டார் கிறேடர் **கனரக வாகனத்தை மக்களின் நலன் கருதி விரைவில் திருத்தி அமையுங்கள் என்று சபை உறுப்பினர்** செ.பிறேமகாந் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய பிரதேச சபை உறுப்பினர். சபையின் மோட்டார் கிறேடர் வாகனமானது நீண்டகாலமாக திருத்தம் மேற்கொள்வதற்கு உரிய நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்றுவரை திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் மக்களுக்கு சேவையை வழங்க முடியாது இருப்பதுடன் சபைக்கு வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

அத்துடன் நிறுவனத்திடமிருந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாதவிடுத்து மோட்டார் கிறேடர் கனரக வாகனத்தை வேறு அங்கீகாரம் பெற்ற திருத்துனர்களினூடாக திருத்தம் செய்யவேண்டும் என்று சபையில் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தவிசாளர் அ.தவகுமாரன் தெரிவித்துள்ளார். (ஜ-13)



தென்மராட்சி தெற்கு மறவன்புலவு வேம்பிராய் கண்ணகை அம்பாள் கோவிலுக்கு காராம்பசு வாகனம் ஒன்று நேற்று கையளிக்கப்பட்டது. திருமதி சுகிர்தமலர் சிவபாலனின் ஏற்பாட்டில் திருமலை சிற்பக்கலைக்கூடத்தால் உருவாக்கப்பட்ட காராம்பசு வாகனமே இவ்வாறு கையளிக்கப்பட்டது. (ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HEALTHIER, LONGER, BETTER LIVES

# ஆயுட்காப்புறுதித்துறையில் சிறந்து விளங்கும் திரு.க.பிரான் அவர்களுடன் ஒரு நேர்காணல்




AIA நிறுவனம் உள்நாட்டில் மிகச்சிறந்த காப்புறுதி தீர்வுகளை ஆயுட்காப்புறுதிதாரர்களுக்கு வழங்கி வரும் சர்வதேச ஜாம்பவான் ஆகும். இந்நிறுவனத்தின் வெற்றிக்கு அதன் Wealth Planner கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வரும் சேவையே காரணமாகும். வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அவர்களும் தமது சொந்த வாழ்வில் வெற்றி பெற்றவர்களாக திகழ நிறுவனம் வழங்கும் பங்களிப்பு அளப்பரியது. வட மாகாணத்தில் அவ்வாறான வெற்றிச் சிகரம் தொட்டு சர்வதேச விருதுகளாலும், கௌரவங்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஒருவரை இன்று சந்திக்கின்றோம்.

**1. உங்களை அறிமுகப்படுத்துங்கள்?**

எனது பெயர் கந்தசாமி பிரான். AIA கிளிநொச்சி பிராந்தியக் கிளையில் Wealth Planning Manager ஆக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். நான் இயற்கை எழில்கொஞ்சும் பூநகரி என்னும் பாரம்பரிய பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்டவன். எனது தந்தையார் ஒரு ஆசிரியர் ஆவார். தாயார் ஒரு அன்பான இல்லத்தலைவி. எனக்கு இரண்டு இளைய சகோதரிகள் இருக்கிறார்கள். மிகவும் மகிழ்வாக வாழ்ந்து வரும் காலத்தில் துரதிஷ்டவசமாக எனது பத்தாவது வயதில் தந்தையை இழந்ததோடு அதனால் ஏற்பட்ட வறுமை மற்றும் சுகயீனம் காரணமாக தாயாரையும் இழந்தேன். மிகச்சிறுபிராயத்திலேயே பெற்றோரை இழந்த நான் பல்வேறு வகையான இடர்பாடுகளையும் சவால்களையும் எதிர் கொண்டேன். அதுமட்டுமல்லாமல் நாட்டில் நிலவிய யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்தேன். இரண்டு சகோதரிகளுக்கு அண்ணனான நான் எமது வாழ் வினை மேம்படுத்துவதற்காக வருமானத்தை ஈட்டவேண்டிய கட்டாயத்தில் இருந்தேன். இச்சூழ் நிலையில் AIA நிறுவனத்தில் சேர்ந்து எனது தேவைகளையும் சகோதரிகளின் தேவைகளையும் நிவர்த்தி செய்து வாழ்க்கை பயணத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளேன். எனது இரண்டு சகோதரிகளும் திருமணம் செய்து மகிழ்வான வாழ்க்கையினை வாழ்கிறார்கள். நான் கடந்த 2019 ஆம் ஆண்டில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டேன். எனது துணைவி ஒரு பொறியியலாளராவார். தற்போது அஷ்மிதா என்னும் அழகிய மகளுடன் மகிழ்வாக வாழ்கிறோம்.

**2. AIA நிறுவனத்தில் எப்போது இணைந்துகொண்டீர்கள்?**

2010 ஆம் ஆண்டு மேமாதம் 03 ஆம் திகதி நிறுவனத்தில் இணைந்து கொண்ட நான் 11 ஆண்டுகளிற்கு மேலாக வெற்றிகரமாக பணியாற்றி வருகின்றேன். இதுவரை பெற்றுள்ள அறிவும் அனுபவமும் நிச்சயம் எனது எதிர்காலத்திற்கு துணைபுரியும்.

**3. AIA நிறுவனத்தினை நீங்கள் தெரிவு செய்ய விசேட காரணம் ஏதும் உள்ளதா?**

பலகாரணங்கள் இருந்தன. அதிலும் விசேடமாக என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவர் நிறுவனத்தினைப் பற்றி எனக்கு மிகவும் பரிந்துரை செய்தார். அத்துடன் சர்வதேச ரீதியில் வியாபித்துள்ள நீண்டகால அனுபவம் கொண்ட நிறுவனமாக உள்ளதுடன் நிறுவனத்தின் சொத்துவளம், வாடிக்கையாளர் தளம் மற்றும் ஏற்கனவே இந்நிறுவனத்தில் இணைந்து சாதனை படைத்தவர்களின் அனுபவப்பகிர்வுகள், வாடிக்கையாளர்களின் பின்னூட்டல்கள் என்பன இந்நிறுவனத்தில் இணைய என்னைத் தூண்டியது.

**4. AIA நிறுவனத்தில் இணைந்த பின்னர் நீங்கள் எதிர்கொண்ட தடைகளும் சவால்களும் என்ன?**

எனது குடும்ப சூழல் காரணமாக உயர் கல்வியை தொடர முடியாமல் தொழிலில் இணைந்தேன். பாடசாலைமட்ட சமூகத்தினரை மாத்திரம் அறிந்திருந்தமையினால் முதற்கட்ட வாடிக்கையாளர் தளமொன்றை அமைத்துக்கொள்ள சிரமங்களை எதிர்கொண்டேன். தற்போது சொந்தமாக வாகனம் வைத்திருக்கும் என்னிடம் நிறுவனத்தில் இணைந்த ஆரம்ப நாட்களில் சைக்கிள்கூட இருக்கவில்லை. குடும்பத் தலைவனாக செயற்பட்ட நான், சகோதரிகளினது பாதுகாப்பு மற்றும் அன்புத்தேவைகளை இழந்த நிலையில் வீட்டுச் சூழலின் மனநிலையுடனே பணியாற்றினேன். அத்துடன் நான் வேலையில் இணைந்தது என் சொந்த மாவட்டம் அல்ல. அந்த வகையில் எனது ஆரம்பகட்டம் மிகவும் சிரமமானதாக இருந்தது. இருந்த போதிலும் நிறுவன முகாமையாளர், ஊழியர்கள் எனக்களித்த ஒத்துழைப்பு, வழிகாட்டல், சிறப்பான பயிற்சிகள் என்பன தன்னம்பிக்கை தந்ததுடன் எனது தொழிலின் சேவைரீதியான முக்கியத்துவத்தையும் உணர்த்தின. நான் படிப்படியாக ஒவ்வொரு சவாலையும் வெற்றியாக மாற்றிக்கொண்டேன்.

**5. சகலரும் ஆயுட்காப்புறுதி ஒன்றை அவசியம் பெறவேண்டும் என கருதுகிறீர்களா?**

ஆம் நிச்சயமாக. சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த நான் அதன் முக்கியத்துவத்தை நன்குணர்ந்தவன். தற்கால உலகிலே வாழ்க்கைச் செலவுகள் பல்கிப்பெருகியிருப்பதோடு, நோய்களும் விபத்துகளும் நிறைந்து விட்டன. இச்சூழலில் ஒரு குடும்பத்தலைவன் எதிர்பாராமல் நோய்வாய் பட்டாலோ, அங்கவீனமுற்றாலோ, மரணித்தாலோ அத்தருணத்தில் அவரிலே தங்கி வாழுகின்ற அவரின் அன்புக்குரியவர்களின் எதிர்காலத்தை பொருளாதாரரீதியாக தாங்கி நிற்கும் தூணாக இருப்பது ஆயுட்காப்புறுதி மாத்திரமே. அதுமட்டுமன்றி எமது வாழ்வில் நிகழக்கூடிய மகிழ்ச்சிகரமான தருணங்களான பிள்ளைகளின் திருமணம் அவர்களின் உயர்கல்வி, ஏனைய நீண்டகாலக் கனவுகளை நிறைவேற்றுதல் மற்றும் ஓய்வுகாலத்தை சிறந்தமுறையில் திட்டமிடல் போன்ற நிதிரீதியான பல்வேறு வாழ்க்கைப்படி நிலைகளுக்கும் ஆயுட்காப்புறுதி துணை நிற்கின்றது.

பாடசாலைக் கல்வியை அதிகமான பிள்ளைகள் கைவிடுவதையும், அதிகமான பெண்கள் தமது கணவன் திடீர் மரணத்தை தழுவும் போது தமது குழந்தைகளை பராமரிப்பதில் சிரமங்களை எதிர்கொள்வதை பார்த்தும் கேட்டும் வருகின்றோம். அதிகமான மக்கள் தமது உயிர்களை கடவுளின் கையில் கொடுத்து விட்டு தமது நோய்களை குணப்படுத்த இலவச சிகிச்சைகளை பெற வைத்தியசாலைகளின் வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்கின்றோம். முறையான சிகிச்சைக்குரிய போதிய பணம் இல்லாமையே இதற்குரிய காரணமாகும். இத்தகைய சகல சமூக பிரச்சினைகளுக்கும் ஆயுட்காப்புறுதி சிறந்த தீர்வாகும். எனினும் இது பற்றிய விழிப்புணர்வு குறைவானது என்பதால் இதற்குரிய வரவேற்பும் குறைவாகும். ஆயுட்காப்புறுதியை பெற்றுக்கொள்ள பொதுவாக தொடர்ந்து ஊக்கமளிக்க வேண்டியுள்ளது. காப்புறுதி வாங்கப்படுவதில்லை, விற்கப்படுவதாக இங்கு கூறப்படுகின்றது. ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அவ்வாறாக எண்ணப்படுவதில்லை. காப்புறுதிகள் உண்மையில் வாங்கப்பட வேண்டும்.

"மனிதர்கள் தமது சொத்துக்களை காப்புறுதி செய்வதில் கவனமாக இருப்பதும் தமது ஆயுளை காப்புறுதி செய்வதை புறக்கணிப்பதும் ஒரு விந்தையான குழப்பமான நிலையாகும். உண்மையில் சொத்துக்களை விட தமது இழப்பின் மூலம் அன்புக்குரியவர்கள் நிர்க்கதியாகாமல் தடுப்பதே மிக முக்கியமாகும்". என அமெரிக்க அறிஞரான பெஞ்சமின் பிராங்ளின் கூறியிருப்பது ஆயுள்காப்புறுதியின் நிகழ்நிலையை தெளிவாக காட்டுகின்றது.

நீங்கள், சரியான முறையில் திட்டமிட்டு ஆயுட்காப்புறுதியினைப் பெற்று நேர்த்தியாகப் பேணி வந்தால் உங்கள் வாழ்நாளில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நிச்சயமாக அதன் பயனை அனுபவிப்பீர்கள் என்பது எனது ஆணித்தரமான கருத்தாகும்.

**6. காப்புறுதித்துறை ஒரு சேவை நோக்கம் கொண்டபணி என்று கருதுகின்றீர்களா?**

மனிதனுடைய தேவைகளை பட்டியலிடும் போது அடிப்படையான தேவைகளுக்கு அடுத்த படியாக இருப்பது அவனது பாதுகாப்புத் தேவையாகும். அந்த வகையில் இந்த தேவையை சிறப்பாக பூர்த்தி செய்வது இன்றியமையாததாகும். அதற்கும் அப்பால் நிதியியல் சேவைகளிலே விசேடமான தன்மைகளைக் கொண்ட தன்னிகரற்ற வியத்தகு சேவையாக காப்புறுதிச் சேவை விளங்குகின்றது. நான் தொடர்ந்தும் ஒரே நிறுவனத்தில் கடமையாற்றி வருவதற்கு ஒரு காரணம் இம்மகத்தான சேவையை வாடிக்கையாளர்களுக்கு சிறந்த முறையில் வழங்க வேண்டும் என்பதுமாகும்.

**7. நீங்கள் தெரிவு செய்த தொழில் குறித்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகின்றீர்களா?**

ஆம் நிச்சயமாக. அனைவரும் வாழ்வில் அனுபவிக்க விரும்புகின்ற சுதந்திரத்தையும் எல்லையற்ற வருமானத்தையும் மட்டுமல்லாமல் உள்நாட்டு வெளிநாட்டு பயணங்கள், அங்கீகாரங்கள், விருதுகள், பல்துறை தொடர்பாடல்கள், நவீன தொழில்நுட்ப வசதிகள் போன்றவற்றை அனுபவிக்கக்கூடிய இத் தொழிலில் மகிழ்ச்சிக்கும் திருப்திக்கும் குறைவே இருக்காது என்று கூறுவதில் மிகையேதுமில்லை. இதற்கும் மேலாக, எனது குடும்பம் கடந்த காலத்தில் எதிர்கொண்ட துரதிஷ்டமான நிலையை, இந்த தொழில்மூலம் எனது சமூகத்தில் உள்ள ஏனையவர் கள் எதிர் கொள்ளாமல் பாதுகாக்க முடிவது எனக்கு மிகப்பெரிய ஆத்மதிருப்தியாகும். அத்தோடு, இந்நிறுவனத்தில் இணைந்த பின்னர் உயர்நிலை தொழிற்கல்வியை சிறப்பாக பூர்த்தி செய்ததுடன், பல உயர்மட்ட சர்வதேச சமூக தொண்டு கழகங்களில் பதவிநிலைகளை வகித்து சேவையாற்றி வருவது மகிழ்ச்சியாகும்.



**8. இத்தொழில்துறையில் இதுவரை நீங்கள் பெற்ற சாதனைகள் என்ன?**

எமது நிறுவனத்தில் புதிதாக இணையும் ஒருவரால் ஆரம்பகாலத்தில் மட்டுமே பெறக்கூடிய சிறப்பு வாய்ந்த "Fast Starter " என்ற பதக்கத்தை வென்று சாதனையாளனாகத் தொழிலை ஆரம்பித்தேன். நிறுவனம் சார்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதனாவது MDRT அங்கத்துவத்தை பெற்றது நானே. MDRT கௌரவமானது காப்புறுதி துறையில் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய அதிஉச்ச சர்வதேச அங்கீகாரமாகும். கடந்த 2016 தொடக்கம் MDRT அங்கீகாரத்தை பெற்றுவருகின்றேன். அமெரிக்கா - ஐரோப்பா உட்பட இதுவரை 15 வெளிநாட்டுப் பயணங்களை வெற்றி கொன்டுள்ளேன். இலங்கை ஆயுட்காப்புறுதித் துறையில் மிகச்சிறந்த 100 ஆயுட்காப்புறுதி ஆலோசகர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். Hong Kong நாட்டில் அமைந்துள்ள AIA நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்ட தேசியரீதியில் சிறந்த 10 பேர் கொண்ட முதனாவது வெல்த் பிளானெர்ஸ் அணியில் நானும் ஒருவராவேன். AIA நிறுவனத்தின் சுப்ரீம் கிளப் அந்தஸ்தினை தொடர்ந்து பெற்று வருகிறேன். இலங்கை காப்புறுதி சங்கத்தின் NAFLIA அங்கத்துவத்தையும் தொடர்ந்து பெற்று வருகின்றேன். நான் இதுவரை பெற்றுள்ள பல சாதனைகளில் குறிப்பிடத்தக்க சில சாதனைகளே இவையாகும். மேலும் கடந்த 11 வருடங்களாக வாடிக்கையாளர் சேவை மற்றும் நிறுவன நடைமுறைகளில் எவ்வித முறைப்பாடுகளும் இன்றி சேவையாற்றி வருவதோடு, வாடிக்கையாளர் தக்கவைத்தல் பெறுமானத்தை அதிஉச்ச அளவில் (95% த்திற்கு மேல்) பேணி வருவதும் எனது சேவைத்தரத்திற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

**9. இத்துறையினைப் பற்றி இளம்தலைமுறைக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

சாதிக்கத்துடிக்கும் இக்காலத்தலைமுறையினருக்கு எனது தொழில் அனுபவம் சிறந்த ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என நினைக்கின்றேன். ஆரம்ப கட்டத்தில் எந்தவொரு அடிப்படை வசதிகளும் இன்றி தொழிலை ஆரம்பித்த என்னால் இவ்வாறு சாதிக்க முடிந்தது என்றால் இக்கால இளந்தலை முறையினரால் இத்தொழிலில் ஈடுபட்டு சாதிக்க முடியும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. AIA நிறுவனமானது சர்வதேச தர மிக்க காப்புறுதி ஆலோசகர்களை (MDRT) உருவாக்குவதில் உள் நாட்டிலும் சர்வதேசரீதியிலும் முதல்நிலை வகிக்கும் நிறுவனமாகும். தொழில் புரிவதற்கு சிறந்த நிறுவனங்களின் பட்டியலில் ஆசியாவில் முதல் 50 இடங்களில் AIA இடம்பிடித்தும் உள்ளது. இளம் தலைமுறையினரின் எதிர்கால வெற்றிக்கு AIA சிறந்த தளமாகும்.

**10. உங்கள் தொழில் வாழ்வில் நீங்கள் நன்றிகூற வேண்டியவர்கள்?**

என்னை இத்தொழில்துறைக்கு அறிமுகப்படுத்திய என் அன்பு நண்பனுக்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவிக்கின்றேன். அவ்வாறே என்னை சீரியமுறையில் தொழிற்துறையிலே வெற்றியாளனாகச் செதுக்கிய தொடக்ககால முகாமையாளர் அவர்களுக்கும் அவரைத் தொடர்ந்து வந்து பக்கபலமாக இருந்த முகாமையாளர்கள், நீண்டகாலமாக ஊக்கமளித்து வரும் மாகாண முகாமையாளர், நிறுவனத்தின் உயர்மட்டத் தலைவர்கள், தலைமை அலுவலக திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், பயிற்சிப் பிரிவின் தலைவர் மற்றும் முகாமையாளர்கள், ஒத்துழைப்பு நல்கும் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் நன்றி கூறுவதில் பேருவகை கொள்கின்றேன். தொழிலை மகிழ்வுடனும் விருப்புடனும் மேற்கொள்ள உறுதுணையாக நிற்கும் குடும்பத்தார், நண்பர்கள், நலன்விரும்பிகள் ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். விசேடமாக எனது ஆலோசனைகளை ஏற்று காப்புறுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து என்னில் நம்பிக்கை கொண்டு என்னுடன் கரம் பற்றியிருக்கும் வாடிக்கையாளச் சொந்தங்களுக்கு எனது சிரம்தாழ்ந்த நன்றிகள்.

நேர்காணல் : அல்தாப் ஹமீட்

# கொழும்பு மக்களுக்கு நிவாரணம் வேண்டும்

## மனோ எம்.பி. அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 14

நாட்டை மூடுவதானால், கொழும்பு மாவட்ட மாநகர பிரதேசங்களை சார்ந்த அன்றாட உழைப்பாளர்கள் தினக்கூலி தொழிலாளர்கள் மற்றும் மத்தியதர வர்க்க ஊழியர்களுக்கு வாராந்த நிதி அல்லது உலர் உணவு பொதி நிவாரணம் வழங்க வேண்டும். அதற்கு அரசு தன்னை தயாப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

கடந்த முறையைபோன்று நாடாளுமன்றிலும், வெளியேயும் கொழும்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நிராதரவாகும் அப்பாவி மாநகர மக்களையும் போராட வைக்க வேண்டாம். இது தொடர்பில் சற்று முன் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் மேஜர் பிரதீப் உதுகொடவிடம் நேரடியாக தெரிவித்துள்ளேன்.



மக்களுக்கு நிவாரணம் வழங்க பெருந்தொகை நிதி தேவைப்படும் என்பது உண்மைதான். அதேவேளை, குடும்ப தலைவர்களுக்கும், தலைவிகளுக்கும் தங்கள் குடும்பங்களை கொண்டுநடத்த, பிள்ளைகளை வாழவைக்க வேறு வழிகள் இல்லை என்பதை அரசு உணர வேண்டும். தடுப்பூசிகள் பெறுவதற்கு பெருந்தொகை நிதி உதவிகள் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை தந்து உதவின. பல நட்பு நாடுகள் அன்பளிப்பாக தடுப்பூசிகளை தந்து உதவின. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், நிதி திரட்டப்பட்டுள்ளது. எனவே நாட்டை மூடுவதானால், மாநகர ஏழை மற்றும் மத்திய தர மக்களுக்கு, நிவாரணம் வழங்கியே ஆக வேண்டும். இதற்கான நிதியை அரசு ஏனைய அபிவிருத்தி, திட்டங்களை இடைநிறுத்தி, திரட்டியே ஆக வேண்டும். ஏற்கனவே வி[illegible] விட்டது. [illegible] சந்தையில் இல்லை. இறக்குமதி பொருள்களும் இல்லை. இறக்குமதி வரி குறைக்கப்பட்டாலும், இறக்குமதியாளர் பொருள்களை இறக்குமதிசெய்ய வங்கிகளில் அந்நிய செலாவணி இல்லை. இதுதான் இன்றைய நிலைமை.

**நிதி அமைச்சர் தேவையில்லை**

"உலகில் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. ஆகவே நான் என்ன செய்வது? என கேட்க நிதி அமைச்சர் தேவையில்லை. உலகில் டொலர் பெறுமதி கூடுவதால், இலங்கை ரூபா மதிப்பிழக்கின்றது என்று கூறுவதற்கு ஜனாதிபதி, பிரதமர் தேவையில்லை. இத்தகைய நெருக்கடியை சமாளிக்க தெரிந்த, கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச ஆகிய இலங்கையின் லீ குவான்யூ, மஹாதிர் முஹம்மத் ஆகிய தலைவர்களிடம் ஆட்சியை கொடுத்துவிட்டு, தொலைந்து போங்கள்" என சொல்லி ஆட்சியை பிடித்த, இன்றைய அரசுக்கு இதற்கு வழி சொல்ல தெரியவேண்டும். இதை அன்று சொன்ன அமைச்சர் விமல் வீரவன்ச போன்றோ[illegible] இன்று மக்களுக்கு பதில்சொல்ல தெரிய வேண்டும். என்றுள்ளது. (த)

# மன்னாரில் இந்த மாதம் 215 பேருக்கு தொற்று!

மன்னார், ஜூலை 14

மன்னார் மாவட்டத்தில் இந்த மாதத்தில் மட்டும் 215 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நேற்றுமுன்தினம் கிடைத்த பி.சி.ஆர். முடிவுகளில் 14 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 256 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் இந்த ஆண்டு ஆயிரத்து 239 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இந்த மாதத்தில் மட்டும் 215 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதம் மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 375 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்னமும் 245 பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் கிடைக்கவில்லை.

அதேநேரம், மன்னார் மாவட்டத்தில் இதுவரை 10 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் - என்றார். (ஏ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்காரக் கந்தனின் கொடியேற்றம்

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகியது.

கொரோனாப் பேரிடர் காரணமாக பக்தர்கள் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை. ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்கள் நல்லூர் முன்வீதியில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடையில் மறிக்கப்பட்டனர். அவர்கள் அங்கிருந்தவாறு வழிபாடு செய்தனர். தேங்காய்களையும் மறிக்கப்பட்ட இடத்திலேயே உடைத்து தமது வழிபாடுகளை மேற்கொண்டனர். பொலிஸார் குவிக்கப்பட்டு பக்தர்கள் தடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள் ஐ.சிவசாந்தன், யாழ்தீபன்)





























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா தொற்றாளர்களின்

# சடலங்களை எரியூட்டுவதற்கு கட்டணம் அறவிடவேண்டாம்

கொழும்பு, ஓக. 14

**கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக உயிரிழப்பவர்களின் சடலங்களைத் தகனம் செய்யும்போது அவர்களது உறவினர்களிடம் எந்தவொரு தொகையையும் அறவிட வேண்டாம்.**

இவ்வாறு அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இந்தக் கலந்துரையாடல் இணையவழி ஊடாக இடம்பெற்றது.

சகல மயானங்களுக்கும் சடலங்களைத் தகனம் செய்வதற்கான எரிவாயுவை இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். அத்துடன் எரிவாயுவை விரைவில் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மேலும் தெரிவித்தார். (ஒ.22)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஓக. 14

குழந்தையுடன் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. தெய்வாதீனமாக குழந்தைக்கு பாதிப்பின்றி தப்பிக் கொள்ள தந்தை காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கொடிகாமம் பாலாவியில் இடம்பெற்றது. காயமடைந்த 34 வயது நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## போதைப்பொருளுடன் பிரிட்டன் பிரஜை கைது

கொழும்பு, ஓக. 14

ஹிக்கடுவ பிரதேசத்தில் ஒரு கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் பிரிட்டன் பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார். ஹிக்கடுவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, 43 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஒ.22)

## கொவிட் தொற்றாளர்கள் அதிகரிப்பு இரண்டாவது விடுதியும் நிரம்பியது

வவுனியா, ஓக.14

தொற்றாளர்கள் அதிகரித்ததையடுத்து வவுனியா பொது மருத்துவமனையின் இரண்டாவது கொரோனா நோயாளர் விடுதியும் நிரம்பியுள்ளது என்று மருத்துவமனை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"வவுனியா பொது மருத்துவமனையில் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், முதலாவது கொரோனா தொற்றாளர் விடுதி அண்மையில் நோயாளர்களால் நிரம்பியது. இதனையடுத்து இரண்டாவது நோயாளர் விடுதியும் கொரோனா நோயாளர்களுக்காக திறக்கப்பட்டது.

தற்போது அந்த விடுதியும் நிரம்பியுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட நோயாளர்கள் மாவட்டப் பொது மருத்துவமனையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் நால்வர் அதி தீவிர சிகிச்சை பிரிவிலும், 20 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் ஒட்சிசன் தேவையுடையோராகவும் காணப்படுகின்றனர்.


மேலும், நால்வர் கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த இரு நாள்களில் உயிரிழந்தனர்.

நாட்டில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படக்கூடிய தருணத்தில் வவுனியா வைத்தியசாலையிலும் ஒட்சிசன் தேவையுடையோர் அதிகரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நாட்டில் கொரோனா இறப்புகளும் தொற்றாளர்களும் அதிகரித்து வரும் நிலையில் வவுனியா மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டிய நிலையில் உள்ளனர்.

வவுனியா மருத்துவமனையின் மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்களும் கொரோனா தொற்றுக்குள்ளாவதால் மருத்துவமனை "நிர்வாக இரட்டை கடின நிலையை" எதிர்நோக்கியுள்ளது. கடும் மனித வலு பிரச்சினையையும் சந்தித்துள்ளது.

இவ்வாறான சூழலில் மக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துகொள்வதுடன் வவுனியா மாவட்டத்தில் நோயாளர் அதிகரிப்பை கட்டுப்படுத்த கடும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டும்" என்றனர். (ஐ-110)




## தண்ணீர் விநியோகத்துக்கு குழாய் பதிக்கும் நிகழ்வு

வவுனியா, ஓக.14

'நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" என்ற திட்டத்தின் கீழ் வவுனியா அண்ணாநகரில் தண்ணீர் விநியோகத்துக்கான குழாய் பதிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வவுனியா மாவட்ட பிரதி பொது முகாமையாளர் ஏ.எம்.எ.ரபீக் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைத் தவிசாளர் த.யோகராஜா, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இத்திட்டத்தின் மூலம் அண்ணாநகர், மதீனாநகர் மற்றும் நெடுங்குளம் கிராமங்களை சேர்ந்த 300 குடும்பங்கள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-110)

## 64 பேர் கைது

கொழும்பு, ஓக. 14

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய மேலும் 64 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 54 ஆயிரத்து 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ.22)

# இந்தியாவுடனான உறவு சுமூகமானதாக இல்லை

### அந்நாட்டுக்கு தூதுவராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொரகொட தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 14

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு சுமூகமாக இல்லை என்பது வெளிப்படையானது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைகள் ஊடாக தொடர்ச்சியான தொடர்பாடல்கள் பேணப்படவேண்டும். இரு நாடுகளும் தங்களுக்கிடையில் அதிர்ச்சியளிக்கக் கூடியவற்றை செய்யாமல் இருக்கவேண்டும். இவ்வாறு இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டு விரைவில் பதவியேற்க இருக்கும் மிலிந்த மொரகொட கூறியுள்ளார்.

இந்தியாவின் 'தஹிந்து' நாளிதழுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறக் கூடிய ஒரு அமைச்சரவை அந்தஸ்திலான தூதுவராக மிலிந்த மொரகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான செயற்றிட்ட வரைவு ஒன்றையும் அவர் முன்வைத்துள்ளார். அதில் முதலீட்டு வாய்ப்புக்கள், மதம் மற்றும் கலாசார உறவுகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால் இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தொடர்புபடுகின்ற நீண்ட கால விடயமான தேசிய இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வு தொடர்பில் எதனையும் அந்தச் செயற்றிட்ட வரைவில் மொரகொட குறிப்பிடவில்லை.

பல்வேறு தரப்பட்ட கட்சிகளை உள்ளடக்கிய கூட்டு அரசுக்கே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமை தாங்குகிறார் என்று கூறிய மொரகொட அரசியல் தீர்வோ அல்லது போரின் முடிவுக்குப் பின்னரான நல்லிணக்கமோ உள்நாட்டில் வகுக்கப்பட்டதாக இருக்கவேண்டும் எனவும், அரசியல் தீர்வு என்பது சட்டங்களைப் பற்றியதோ அல்லது அரசமைப்பை பற்றியதோ இல்லை என்றும் குறிப்பிட்டார்.

'மாகாணசபை முறைமை தேவையற்றது. நாட்டுக்கு தேவையற்ற செலவுகளை உருவாக்குகின்றது. மக்களிடையே பிளவுகளுக்கு அது வழிகோலுகின்றது. எனவே மாகாணசபை முறைமை ஒழிக்கப்படவேண்டும்' என்ற நிலைப்பாட்டை மொரகொட முன்வைக்கின்றார். ஆனாலும் அது தனது தனிப்பட்ட நிலைப்பாடு என்பதையும் நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வாக, சகல இனக் குழுமங்களையும் நியாயமான முறையில் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய செனட் சபை உருவாக்கப்படவேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் அதிகரிக்கப்படவேண்டும் எனவும் அவர் நேர்காணலில் வலியுறுத்தியுள்ளார். (ஒ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலாக்கலில் மாவட்ட சபை முறைமை

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி யோசனை

**கொழும்பு, ஓக. 14**

**மாகாணசபை அதிகாரங்களை பரவலாக்கும் போது மாவட்ட சபை முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி யோசனை முன்வைத்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகியன தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவுக்கு தமது முன்மொழிவுகளை எழுத்து மூலம் கடந்த புதன்கிழமை கையளித்தன.**



தற்பொழுது கலப்பு தேர்தல் முறைமையொன்று நாட்டுக்கு தேவை என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அத்தியாவசியம் எனவும், ஜனாதிபதியாக இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் நியமிக்கப்படுவதை தடுப்பதற்கு உரிய முறைமை தயாரிக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

**மாவட்டசபை முறைமை**

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பவற்றை ஒரே தினத்தில் நடத்துவதற்கான சாத்தியம், மாகாண சபை தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தலைகளையும் ஒரே தினத்தில் நடத்துவதன் சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் விசேடமாக கண்டறிய வேண்டும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். மாகாணசபை அதிகாரங்களை பரவலாக்கும் போது மாவட்ட சபை முறையை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

**பரப்புரைக்கு பணம் கட்டுப்பாடு**

அரசியல் கட்சிகள் கூட்டணி அமைக்கும் போது அதனுடன் தொடர்புடைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட ஆவணங்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கும் முறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். தேர்தல்களின் போது ஒவ்வொரு கட்சிக்கும் நியாயமான பரப்புரை வாய்ப்புக்கள் இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, புதிய மறுசீரமைப்பின் போது தேர்தல் பரப்புரை செலவுகளை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என தெரிவித்தார். பணத்தை செலவு செய்து தேர்தலில் வெற்றிபெறும் போக்கொன்று தற்பொழுது ஏற்பட்டிருப்பதாகவும், அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு விரிவாக கவனம் செலுத்தவேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**புதிய தேர்தல் முறைமை**

லங்கா சமசமாஜ கட்சி சார்பில் குழுவில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, அனைத்து இன மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய தேர்தல் முறைமையொன்று நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட வேண்டியது இந்நேரத்தில் தேவையானது என தெரிவித்தார். அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதை தடுப்பதன் முக்கியத்துவத்தையும் பேராசிரியர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் அரசியல் முறைமை இருக்கவேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் குழுவில் தெரிவித்தனர். தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

**நிறைவேற்றதிகாரம் வேண்டாம்**

உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்துவது முக்கியமானது என குழுவில் கருத்துத் தெரிவித்த ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சியினர் தெரிவித்தனர். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முற்றாக நீக்கி, நாடாளுமன்ற முறைமையை வலுப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டனர்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும், குழு முன்னிலையில் தமது முன்மொழிவுகளை சமர்ப்பித்ததுடன், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு புதிய மறுசீரமைப்பில் விரிவாக கவனம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார். பல உலக நாடுகள் இலத்திரனியல் வாக்கெண்ணும் முறையை பயன்படுத்திவருவதுடன் பரீட்சார்த்த நடவடிக்கையாக இலங்கையிலும் அந்த முறையை முயற்சித்து பார்க்கவேண்டும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பிரதி நிதிகள் குழுவில் தெரிவித்தனர். (ஒ.5)

# வவுனியாவில் தொடரும் பி.சி.ஆர். பரிசோதனைகள்

வவுனியா, ஓக. 14

வவுனியாவில் அழகக நிலையங்கள் (சலூன்) மற்றும் பெண்கள் அழகு நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் நாளாந்தம் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்ற இந்நிலையில் அழகு நிலையங்களில் முகச்சவரம் மற்றும் முகப்பராமரிப்பு, அழகுபடுத்தல் போன்ற செயற்பாடுகளின் போது முகக்கவசம் அணியாமையால் கொரோனா தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து வவுனியா சுகாதார பிரிவினர் திடீர் களத்தரிசிப்பு முன்னெடுக்கப்பட்டது. புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள இரண்டு அழகக நிலையங்கள் மற்றும் மூன்று பெண்கள் அழகு நிலையம் என்பனவுக்கு சென்ற சுகாதார பிரிவினர் அங்கு பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் குறித்த நேரத்தில் நின்ற வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கு பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுத்திருந்தனர். (ஒ.18)

# உப தவிசாளர் பதவி துறப்பு




முல்லைத்தீவு, ஓக. 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உபதவிசாளர் தி.இரவீந்திரன் தனது பதவி விலகல் கடிதத்தை பிரதேச சபை செயலரிடம் கையளித்துள்ளார். அத்துடன் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பதவி விலகல் கடிதத்தை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் உறுப்பினராகத் தெரிவான அவர், சபையின் உப தவிசாளராகப் பதவி வகித்து வந்தார். கட்சியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உப தவிசாளர் பதவியைத் துறந்துள்ளார்.

தொடர்ந்து உறுப்பினராகச் செயற்படுவார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை அமர்வுகள், தவிசாளர் க.விஜிந்தன் தலைமையில் ஆரம்பமாகியது. தொடர்ந்து உபதவிசாளராகப் பதவி வகித்த தி.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. (ஒ.19)



# சமையல் எரிவாயு நிறுவனத்தை ஆரம்பிக்கும் பெற்றோலிய கூட்டுத்தாபனம்

கொழும்பு, ஓக. 14

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இணை நிறுவனமாக புதிய நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து அதன் ஊடாக சமையல் எரிவாயுவை சந்தைக்கு விநியோகிக்க எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில வுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை வரலாற்றில் மிகப் பெரிய முதலீடாக புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் பணிகளை எரிசக்தி அமைச்சு ஆரம்பித்துள்ளது. இந்தப் பணிகள் முடிந்த பின்னர் தேசிய எரிவாயு தேவையில் 20 வீதத்தை உற்பத்தி செய்யும் இயலுமை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்கும்.

புதிய எரிவாயு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், போட்டியான விலையில் சந்தைக்கு எரிவாயுவை வழங்க எதிர்பார்த்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ஒ.இ)

# குளமா? குப்பைத்தொட்டியா?

## பியர் ரின்களால் நிரம்பும் கிளிநொச்சிக் குளம்

கிளிநொச்சி, ஓக. 14

சாராயப் போத்தல்களாலும் பியர் ரின்களாலும் நிரம்பி வழியும் இடமாக கிளிநொச்சி குளம் மாறியுள்ளது.

கிளிநொச்சி நகரச் சூழலில் அமைந்துள்ள இக்குளத்தில் மதுப்பிரியர்கள் தாங்கள் அருந்தும் சாராய, பியர் ரின்களை வீசுகின்றனர். இதனால் குளத்தில் எந் நேரமும் சாராய, பியர் ரின்கள் மிதப்பதை காணலாம். நன்னீர் மீன்பிடிக்காக வலை விரிக்கும் மீனவர்களின் வலையில் மீன் அகப்படுகின்றதோ இல்லையோ பியர் ரின்களும் சாராயப் போத்தல்களும் சிக்கும் அவலம் காணப்படுகின்றது.

இதேவேளை, கிளிநொச்சிக்குளத்தை சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான திட்டங்கள் உள்ளன. தற்போது இரணைமடுக் குளத்தி லிருந்து இக்குளத்துக்கு நீர் வழங்கப்பட்டுகின்றது. கிளிநொச்சி நகருக்கான குடிநீர் வழங்கலுக்காக அருகில் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு சூழலிலேயே கிளிநொச்சி நகரக் குளம் மதுப்பிரியர்களால் நரகமாக்கப்படுகின்றது. (ஒ.13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா சாவுகளை மறைக்கின்றது அரசு!

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஓக. 14**

**கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்புக்கள் தொடர்பான உண்மைத் தகவல்களை அரசு மறைக்கின்றது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றஞ் சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் இன்று கொரோனா வைரஸ் வேகமாக பரவிவருகின்றது. முழு நாடும் மரண பீதியில் உள்ளது. நாளாந்த உயிரிழப்பு எண்ணிக்கை 100 ஐ தாண்டியுள்ளது. எனினும், அரசால் வெளியிடப்படும் தகவல்கள் உண்மை இல்லை என்ற தகவலை பொறுப்புடன் கூறுகின்றேன். தொற்றாளர்கள் மற்றும் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கையின் அளவு இதைவிடவும் அதிகமாகவே இருக்கக்கூடும். கம்பஹா மாவட்ட செயலணிக்கூட்டத்தின்போது இந்த விடயம் உறுதியானது. தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்து காண்பித்து, நாம் வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்திவிட்டோம் என காண்பிப்பதற்கான கீழ்த்தரமான முயற்சி எடுக்கப்படுகின்றது. இதன்படி கொரோனாவால் வீட்டில் உயிரிழந்தால்கூட அதனை கொரோனா உயிரிழப்புடன் சேர்க்க வேண்டாம் என அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டில் வைத்து கொரோனாவால் உயிரிழக்கும் பட்சத்தில் இதய நோய் அல்லது சிறுநீரக நோயால் ஏற்பட்ட சாவு என்றே காண்பிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கை தவறு. எனவே, சுகாதார தரப்பினரால் முன்வைக் கப்படும் பரிந்துரைகளை ஏற்று, காத்திரமான முடிவுகளை அரசு எடுக்க வேண்டும். உக்ரைன் நாட்டு பிரஜைகளை அனுமதித்ததாலேயே நாட்டில் 2ஆவது அலை உருவானது. தற்போது ரஷ்ய நாட்டு பிரஜைகளை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுவருகின்றது- என்றார். (ஒ.44)

# அறியாமல் எவரும் கருத்துரைக்காதீர்

## உதய கம்மன்பில எச்சரிக்கை

கொழும்பு,ஓக.14

அரசு மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன் வைப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். எதனையும் அறியாமல் எவரும் கருத்துரைக்க வேண்டாம் என்று வலுச்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக செயற்படும் வசந்த சமரசிங்க திருகோணமலை துறைமுகம் மற்றும் திருகோணமலை எண்ணெய் குதங்களுக்குச் சொந்தமான 33 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது. அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று ஊடக சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறிய விடயங்கள் அடிப்படையற்றவை.

திருகோணமலை துறைமுகம், எண்ணெய் குதங்களுக்கு சொந்தமான நிலப்பரப்பு ஒப்பந்த அடிப்படையில் அமெரிக்காவுக்கு வழங்க அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். முடிந்தால் அமைச்சரவை பத்திரத்தின் பிரதியை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும். 2003 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் திருகோணமலை எண்ணெய் குதங்கள் 35 வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தம் 2038 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவடையும்.

நாம் தற்போது 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளோம். என்பதை ஊழல் ஒழிப்பு அமைப்பின் தலைவர் வசந்த சமரசிங்க அறியாமல் கருத்துரைக்கின்றார். இவ்வாறு போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை மக்கள் விடுதலை முன்னணியினரும், அவர்களுக்குச் சார்பாகச் செயற்படும் அமைப்பினரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கும் காலம் தகுந்த பாடத்தைக் கற்பிக்கும். என்றார். (ஒ.4)

### யானைகள் அட்டகாசம்

# ஒட்டறுத்த குளம் கிராமத்தின் விவசாய நிலங்கள் பாதிப்பு

வவுனியா,ஓக.14

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் உள்ள ஒட்டறுத்த குளம் கிராமத்தினுள் நுழையும் காட்டு யானைகள் வீட்டின் தோட்ட பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களை நாசம் செய்கின்றன என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றுமுன்தினம் அதிகாலை கிராமத்தினுள் நுழைந்த யானைகள் வீட்டு வளவுகளில் உள்ள தென்னைகள் மற்றும் வாழைகள் போன்ற பயன் தரு மரங்களை அழித்துள்ளன.

கிராமத்தை யானைகள் ஆக்கிரமித்து வருவதால் சொந்த கிராமத்தில் இருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த பகுதியில் யானை வேலி அமைக்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்

அண்மைக்காலமாக குறித்த பிரதேசம் யானைகள் நடமாடும் பகுதிகளாக காணப்படுவதுடன் . அண்மையில் பருத்தித்துறை வாசி ஒருவர் இரவு வேளையில் குறித்த பகுதியில் பயணம் செய்த வேளை யானை தாக்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-19)

# மாங்குளத்தில் பஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டும்

## கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு.ஓக.14

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் இரவு வேளைகளிலும் தரித்து நின்று பணியில் ஈடுபடக் கூடிய வகையில் முல்லைத்தீவு மாங்குளத்தில் பஸ் நிலையம் உருவாக்கப்பட வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபை இயங்கிய காலத்தில் மாங்குளம் நகரத்தில் பஸ் நிலையம் ஒன்றை உருவாக்கி, இரவு வேளைகளில் இ.போ.ச. பஸ்கள் தரித்து நின்று மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள கிராமங்களுக்கான பஸ் சேவைகளை நடத்தலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால் இதுவரை அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது முல்லைத்தீவு நகரில் இருந்துதான் கிராமங்களுக்கான பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. இவை தாமதமாக இடம் பெறுவதன் காரணமாக பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் நேரத்துடன் தமது இடங்களுக்குச் செல்ல முடியாத அவலம் காணப்படுகின்றது. இந்த நிலையில் மாங்குளத்தில் பஸ் நிலையம் அமைந்தால் பொதுமக்கள் பெரும் நன்மையடைவார்கள். என்றனர். (ஐ13)



# சிறுமி சாவுக்கு நீதிகோரி பிரதேச சபையில் தீர்மானம்

முல்லைத்தீவு, ஓக. 14

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் உயிரிழந்த சிறுமிக்கு நீதி கோரிய தீர்மானம் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அமர்வு கடந்த 12ஆம் திகதி தவிசாளர் க.விஜிந்தன் தலைமையில் நடைபெற்றது.

அமர்வின் ஆரம்பத்தில், கொரோனா தொற்றால் உயிரிழந்த வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளருக்கு அகவணக்க அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து சபை அமர்வுகள் நடைபெற்றன. இதன்போது பிரதேச சபை உறுப்பினர் அன்டனி ரங்கதுசாரவால் பிரேரணை முன்வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணி புரிந்த சிறுமியின் உயிரிழப்புக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து அவரது உயிரிழப்புக்கு நீதி கோரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஒ.19)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்**: பலகாலமாக மனதில் இருந்த திட்டம் வெற்றி பெறும் நாள். நண்பர்களின் ஆதரவு கிட்டும். எதிர்க் கருத்துடையோர் மனம் மாறுவர். ஏற்ற, இறக்கமான சூழ்நிலைகள் இனி மாறும்.

**இடபம்**: இனிய அனுபவம் கிடைக்கும். நிதி நிலை மேம்படும். எதிர்பாராத திருப்பம் ஏற்படும். தொழிலில் புதிய மாற்றம் உண்டு. வீடு, இடம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்**: நட்பு வட்டம் விரிவடையும். பல நாள் உறுத்தல் தீரும். நீங்கள் எடுத்த முயற்சி ஒன்று நல்ல பலன் தரும். காலை நேரத்திலேயே பொருள் வரவு உண்டு. மகிழ்ச்சி கூடும்.

**கடகம்**: செல்வாக்கு மிக்க ஒருவரின் சந்திப்பைத் தவிர்க்கப் பாருங்கள். பணத்தைப் பெருக்குவதில் நாட்டம் அதிகரிக்கும் நாள். காலை யில் வரும் செய்திகள் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

**சிம்மம்**: முக்கியமான நபர் ஒருவரை சந்திப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். தன்னம்பிக்கையோடு செயல்பட்டு தடைகளை அகற்றி முன்னேறுவீர்கள். குடும்பத்தில் முன்பு ஏற்பட்ட குழப்பங்கள் தீரும்.

**கன்னி**: விட்டுப்போன வியாபாரப் பேச்சு மீண்டும் தொடரலாம். வருமானம் பற்றிய கவலை தீரும். சந்தித்தவர்களால் சந்தோஷம் கிட்டும். கனவுகளை நனவாக்கும் முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

**துலாம்**: குடும்பத்தில் ஒருவருக்குத் திருமண முயற்சி வெற்றி பெறும். யோகமான நாள். நினைத்ததைச் செய்து முடிப்பீர்கள். அதிகாரிகள் அனுசரணையுடன் நடந்து கொள்வார்கள்.


**விருச்சிகம்**: குடும்ப விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வரலாம். சச்சரவுகள் அகன்று சமாதானம் ஏற்பட்டு நிம்மதி பெறுவீர்கள். மனதில் தெளிவு பிறக்கும். எதிரிகள் விலகுவர்.

**தனுசு**: குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். உடல்நலம் சீராக இருக்கும். யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். செலவு அதிகரிக்கலாம். நினைத்த விஷயம் நிறைவேறி நிம்மதி ஏற்படும்.

**மகரம்**: உங்களது வழிபாட்டு முறைகளை மாற்ற வேண்டாம். நிம்மதி கூடும். மாறுதல்கள் இன்றி வழக்கப்படியான நாள். விரயங்கள் சற்றே கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**: வீடு மாற்றம் பற்றி இப்போதைக்கு திட்டம் வேண்டாம். அலைச்சல் அதிகரிக்கலாம். பணியில் கவனக் குறைவு வேண்டாம்.

**மீனம்**: திறமைகளை வெளிப்படுத்த தவற வேண்டாம். புதிய வாய்ப்பு வரும். பணிகளில் சிறு தடை, தாமதங்களைச் சந்திக்க நேரிடும். அதிர்ஷ்ட வாய்ப்பு ஒன்று உங்களைத் தேடிவரும்.



# ஜிவி பிரகாஷின் புதிய படம் இடிமுழக்கம்




இசையமைப்பாளரும் நடிகருமான ஜி.வி.பிரகாஷ் தற்போது இளம் நடிகராகவும் தமிழ் சினிமாவில் வலம் வருகிறார். இவர் நடிப்பில் பல படங்கள் உருவாகி வருகின்றன.

தற்போது இயக்குநர் சீனு ராமசாமி இயக்கத்தில் ஒரு படத்தில் நடித்து வருகிறார். இவருக்கு ஜோடியாக காயத்ரி ரகுமான் நடிக்கின்றார்.

இந்த நிலையில் இந்தப் படத்துக்கு 'இடிமுழக்கம்' என்று பெயரிடப்பட்ட டைட்டில் போஸ்டரை விஜய் சேதுபதி தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்த போஸ்டர் தற்போது ரசிகர்களால் கவரப்பட்டு வருகின்றது.









# வெற்றியின் ரகசியம்

ஒரு தந்தையிடம் மகன் தனக்கு ஏதேனும் ஒரு துன்பமோ அல்லது மனக்கவலையோ ஏற்படும்போது வந்து கலங்கி நிற்பான். அப்போது அவனது பிரச்சினையை கேட்ட பின் தந்தை ஒரே வார்த்தையில் "இவ்வளோதானா உன் பிரச்சினை! எல்லாம் சரியாகிடும்" என்பார்.

அவனுக்கும் சில நாட்களில் அந்த பிரச்சினையோ துன்பமோ இல்லாமல் போய்விடும். அந்த மகனும் வளர்ந்தான். தந்தைக்கும் வயதானது. அவரது மகன் தற்போதெல்லாம் எந்த பிரச்சினை வந்தாலும் தந்தையிடம் சிரித்துக்கொண்டே சொல்ல ஆரம்பித்தான். ஒரு நாள் மகன் தந்தையிடம் கேட்டான். "ஏம்பா, நான் எவ்ளோ பெரிய பிரச்சினை எண்டு வந்தாலும் இவ்வளோதானானு கேட்குறீங்க. எனக்கும் அந்த பிரச்சினை சுலபமா முடிஞ்சிடுதே... எப்படிப்பா?" என்றான்.

அந்த தந்தை சிரித்துக்கொண்டே சொன்னார்: "சில வருடங்களுக்கு முன் பிரச்சினைனா கண்கலங்குவாய். நீ கலங்கும்போது அந்த பிரச்சினையை எப்படி தீர்க்குறது என்பது உனக்கு தெரியாம இருக்கும். நான் இவ்வளோதானானு கேட்டதும், உன் மனம் இது ஒரு பிரச்சினையே இல்லை என்கிற முடிவுக்கு வந்து, அந்த பிரச்சினைக்கு தீர்வையும் கண்டுபிடித்து தீர்த்துடுவாய். இப்போ எவ்ளோ பெரிய பிரச்சினை உன் முன்னாடி இருந்தாலும், அதற்கான தீர்வு மட்டுந்தான் உனக்குத் தெரியும். சின்ன வயசுல எனக்கு ஏதாவது பிரச்சினைனா என்னை பயமுறுத்த ஆள் இருந்தாங்களே தவிர, தைரியம் சொல்ல ஆள் ரொம்ப குறைவு. அதனாலதான் நான் எப்பவும் உன்கிட்ட எந்தப் பிரச்சினைனாலும் இவ்வளோதானானு கேட்பேன்." நாம் எவ்வளவு புத்தசாலியாக இருந்தாலும், ஒரு நிமிடம் "இவ்வளவா?" என்று நினைத்தால் நாம் அங்கேயே நின்றுவிடுவோம். அதற்கு பதிலாக "இவ்வளோதானா?" என்று நினைத்தால் அதைத் தாண்டி அடுத்த கட்டத்துக்கு போய்விடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ச ப் பா.ணி @manipmp

**படிக்காத,வெள்ளந்தியான அம்மாக்களை பெற்ற கடைசி தலைமுறை நாம் தான்.!**

செங்காந்தள்@kumarfaculty

**செருப்புத் தைப்பவருக்கு தன்னைக் கடந்து செல்பவர்களின் கால்கள்தான் முகம்..!!!**

ச ப் பா ணி @manipmp

**வெற்றிகளுக்கு நம் இன்ஷியல். தோல்விகளுக்கு அடுத்தவர்களின் இன்ஷியல்.**



# இன்னும் 90 நாள்களில் தலிபான்களிடம் காபூல்!

## அமெரிக்க இராணுவ அதிகாரி தகவல்

**காபூல், ஓக. 14**

**ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கம் விரைவாக அதிகரித்துவரும் நிலையில், இன்னும் 90 நாள்களில் காபூல் தலிபான்களின் கட்டுப்பாட்டில் முழுமையாகச் சென்றுவிட வாய்ப்புக்கள் உள்ளன என்று அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.**

ஆப்கானிஸ்தானின் 34 மாகாணங்களில் 10 மாகாணங்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஏற்கனவே வந்துள்ளன. இந்த நிலையில் காபூலுக்குச் செல்லும் நெடுஞ்சாலைகளையும் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர். இதனால் அடுத்த 3 மாதங்களுக்குள் தலிபான்கள் காபூலைக் கைப்பற்றும் சூழ்நிலை உருவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின் றது. இது தொடர்பில் அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் ரொயிட்டர்ஸ் நிறுவனத்திடம் தெரிவிக்கையில், 'காபூல் இன்னும் எத்தனை நாள்களுக்குத் தாக்குப்பிடிக்கும் என்பது தலிபான் தீவிரவாதிகள் முன்னேறிச் செல்லும் வேகத்தைப் பொறுத்து அமையும். எங்கள் கணிப்புச் சரியாக அமைந்தால் அடுத்த மூன்று மாதங்களில் காபூல் தலிபான்களிடம் சென்றுவிடும்' என்று தெரிவித்துள்ளார். (ம)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 30.09.2011

இறைவன் அடியில் 26.07.2020

அமரர் பிரதீபன் தஸ்விகன்

திதி : ஷஷ்டி (14.08.2021)



கண்ணுக்குள் நீ தெரிந்தாய் - என
கண் திறந்தால் ஏன் மறைந்தாய்
பாசத்துடன் பார்த்த உன் முகம்
பாருலகில் இனி எங்கு தெரியும்
பாலூட்டிய தாயாரும் பாடம் சொல்லித் தந்த
தந்தையாரும் வா மகனே! என்றழைக்க
வானுலகம் சென்றதன் காரணம் என்னடா
எம்மோடு நடமாடினாய் எம்மோடு விளையாடினாய்
இனி எம்மோடு விளையாட உன்னை எங்கு நாமும் கண்டறிவோம்
எம்மடியில் சாய்ந்த நீயோ அன்று பூமிமாதா மடிசாய்ந்தாய்
இனி நீ சொர்க்க மாதா மடிசாய இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தாத்தா, அப்பம்மா
மற்றும் உறவினர்கள்

மில் ஒழுங்கை, மல்லாகம்




# அதிகாரத்தில் பங்கு தருகிறோம் வன்முறைகளைக் கைவிடுங்கள்!

## தலிபான்களிடம் ஆப்கான் அரசு கோரிக்கை

காபூல், ஓக. 14

அதிகாரத்தில் பங்கு தருகிறோம் வன்முறையைக் கைவிடுங்கள் என மத்தியஸ்தர்கள் மூலம் ஆப்கான் அரசு தலிபான்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்பட்டுள்ள நிலையில் தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கம் அங்கு மேலோங்கி வருகிறது. இந்த நிலையில் தலிபான்களுடன் ஆட்சி அதிகாரத்தைப் பங்குபோடுமளவுக்கு ஆப்கானிஸ்தான் அரசு இறங்கி வந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பான சர்வதேச ஆலோசனைக் கூட்டம் கட்டாரில் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, பிரிட்டன், உஸ்பெகிஸ்தான், கட்டார் நாட்டுப் பிரதிநிதிகளும், ஐ.நா சபை மற்றும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளனர். இந்தக் கூட்டத்திலேயே தலிபான்களிடம் ஆப்கானிஸ்தான் அரசால் இவ்வாறானதொரு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ம)



ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே கடும் போர் இடம்பெற்றுவரும் நிலையில், பல்லாயிரக் கணக்கான ஆப்கானிஸ்தான் மக்கள் அடைக்கலம் தேடி பாகிஸ்தானுக்குள் ஊடுருவ முயற்சிக்கின்றனர். அவ்வாறு பாகிஸ்தானுக்குள் செல்வதற்காக ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் எல்லையில் காத்திருக்கும் மக்களின் ஒளிப் படமே இது. (ம)

# சீனாவில் மழை!

பீஜிங், ஓக. 14

சீனாவில் பலத்த மழை காரணமாக சுமார் 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ள நிலையில் தற்போதும் மழை தொடர்ந்து வருகின்றது.

ஹுபெய் நகரம் மழை வெள்ளத்தில் மூழ்கி உள்ளது. இந்த மாகாணத்தில் உள்ள பல லட்சம் மக்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர்.

சிறு படகுகளிலும் உலங்கு வானூர்திகளிலும் மீட்புப் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். சுமார் 21 பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின்மைக்கான விளக்கங்களும் தீர்வுகளும்






**மருத்துவ நிபுணர் டாக்டர்.சி.ரகுராமன்**
MBBS, MD (Obs&Gny), MRCOG(UK)
சிரேஷ்ட விரிவுரையாளர்,மருத்துவபீடம்,யாழ்ப்பாணம்,
பெண்ணியல் மற்றும் மகப்பேற்றுவைத்தியநிபுணர்,
யாழ் போதனாவைத்தியசாலை.

குழந்தையின்மை என்பது இக்காலத்தில் மிகவும் சாதாரணமாக, எங்கும் பேசப்படும் ஒரு விடயமாக உள்ளது. குழந்தையின்மைக்கு, கருத்தரித்தல் தாமதமடைதல், மலட்டுத்தன்மை என பல சொற்பதங்கள் தமிழிலே எழுத்து வடிவிலும் ,பேச்சு வழக்கிலும் காணப்படுகின்றன. இந்தத் தொடர் மூலம் மக்களுக்கு குழந்தையின்மை பற்றிய தெளிவான அறிவை மருத்துவ ரீதியாகவும் ,அதற்குக் கிடைக்கும் சிகிச்சை முறைகள் பற்றியும் தொடர்ச்சியாக விளக்கவுள்ளோம். கருத்தங்காமையானது உலகளவிலும் , இலங்கையிலும் அதிகரித்துவருகின்ற ஒருமருத்துவ,மற்றும் சமூகப்பிரச்சினையாகவும் உள்ளது. உலக சுகாதார நிறுவனமானது (WHO) ஏறத்தாழ 48 மில்லியன் தம்பதியினர் இதனால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் ,ஏறத்தாழ 7 தம்பதியினரில் ,ஒரு தம்பதியினருக்கு கருத்தரித்தலில் பிரச்சினை உள்ளதாகவும் கூறுகின்றது. இலங்கையில் கருத்தரித்தல் வீதமானது காலத்துடன் குறைந்து விடுகின்றது. ஒரு தம்பதியினர்,தொடர்ச்சியாக ஒருவருடம் எந்தவொரு கருத்தடை முறைகளையும் பாவிக்காமல் ,சரியான நேரத்தில் உடல் உறவில் ஈடுபட்டும் குழந்தை தரிக்காத நிலையை குழந்தையின்மை (subfertility ) எனக் கூறலாம். சாதாரணமாக,ஒருவருடம் தொடர்ச்சியாக முயற்சி செய்யும் போது அந்தத்தம்பதியினர் கருத்தரிக்கக் கூடியசந்தர்ப்பம் 85%ஆகும்.

மேலே சுட்டிய கூற்றில் உள்ள இரண்டு விடயங்களை மேலும் விரிவாகப் புரிந்துகொள்வோம். முதலாவது, கருத்தடைமுறை. கருத்தடை முறைகள் என்றால், சிலதம்பதியினர் கர்ப்பமாவதைச் சற்றுப் பிற்போடுவதற்காக எடுத்துக் கொள்ளும் முறைகள் ஆகும். இந்தக் கருத்தடை முறைகள் இருபாலாருக்கும் உள்ளன. உதாரணமாக ஆணுறை பாவித்தல், கருத்தடை மாத்திரைகள், ஊசி முறைகள் முதலிய வற்றைக் குறிப்பிடலாம்.


இரண்டாவது, சரியான நேரத்தில் உடல் உறவுகொள்ளுதல் என்பது பெண்களின் சூலகத்தில் இருந்து முட்டைவெளியேறும் நேரத்தில் அல்லது அதை அண்மித்த நேரத்தில் உடலுறவு கொள்ளும்போது விந்துமுட்டையுடன் சேர்ந்து கருவாகும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது. சாதரணமாக,28 நாட்களுக்கு ஒருமுறை மாதவிடாய் ஏற்படும் பெண்களில் 14 ஆம் நாள் சூலகத்தில் இருந்து முட்டை வெளியேறும். எனவே, இதற்கு முன்னரும் பின்னருமான நான்கு நாள்கள் (10ஆம் நாளில் இருந்து 18ஆம் நாள் வரை) சரியானநேரமாக (fertile period) கணிக்கப்படும்.

இருப்பினும் ,எல்லாப் பெண்களுக்கும் 28 நாள்களில் மாதவிடாய் சரியாகவருவது இல்லை. ஆகவே 14 ஆம் நாள் முட்டை வெளியேறுதல் என்பது எல்லோருக்கும் பொருந்தும் என்று கூறமுடியாது. முட்டைவெளியேறுவதை அறிந்துகொள்ளச் சிலமுறைகள் உள்ளது. இவற்றில் பல நம்பகத்தன்மை குறைந்ததாகவும், இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுவதும் இல்லை. உதாரணமாக, உடல் வெப்பநிலை அதிகரித்தல் , அடிவயிற்றில் ஏற்படும் சிறுவலி,கருப்பைக் கழுத்தில் இருந்து வெள்ளைபடுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இருப்பினும் இவற்றின் நம்பகத்தன்மை குறைவு. எனவே இதைத் தம்பதியினர் உபயோகிப்பதைத் தவிர்க்கவேண்டும். மேலும் நவீனமுறையாகச் சில ஓமோன் உடலில் அதிகமாகச் சுரப்பதைக் கண்டறியமுடியும்.எனினும் இது இலங்கையில் எளிதாகக் கிடைப்பதில்லை.




குழந்தையின்மையை இரண்டுவகைப்படுத்தலாம். முதலாவதாகத் திருமணத்தின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும்,ஒரு வருடத்துக்கு மேலதிகமாக கருத்தங்காமை (pirmary subfertility) இரண்டாவது,ஏற்கனவே கருத்தரித்த பின்னர் ஒருவருடத்துக்கு மேலாக அடுத்த கருத்தங்காமை (secondar ysubfertility)

இவ்வகையான கருத்தங்காமையின் வகைப்படுத்துதலானது மருத்துவ ஆலோசனைக்கும் ,அதற்கான



தீர்வுகளுக்கும் உதவியாக இருக்கும். எனவே தம்பதியினர் மருத்துவரை நாடும் போதுமுன்னர் ஏதும் கருத்தங்கியிருந்தால் அதனைத் தெளிவுபடுத்த வேண்டும். மேலும் குழந்தை உள்ள தம்பதியினர் அடுத்த குழந்தைக்கு முயற்சிக்கும்போது ஒருவருடத்துக்கும் மேலாக,கருத்தங்காவிடின் மருத்துவ ஆலோசனையை நாடவேண்டும்.

**இயற்கையாக கரு உருவாகும் முறை**


இயற்கையாக கரு உருவாகும் முறையைப் பற்றிச் சற்று விளக்கமாகப் பார்ப்போம். அடிப்படையில்,ஆணின் விந்தானது பெண்ணினுடைய ஒரு சூல் முட்டையைச் சந்தித்து இணையும் போது கரு உருவாகின்றது. விந்துக்கள் (sperms)ஆணின் விதைப்பையினுள் உருவாக்கப்படுகின்ற , கண்ணுக்குத் தெரியாத கலங்கள் ஆகும். உடலுறவின் போது ஆணின் ஆண் குறியில் இருந்து சுக்கிலப் பாயம் (semianl fluid) பெண்ணின் யோனிக்குள் சென்றடைகின்றது. இந்தச் சுக்கிலப் பாயமானது விந்து(sperm) உட்பட பல பதார்த்தங்கள் ,நீர் என்பவற்றால் உருவாக்கப்படுகின்றது. ஒருமுறை வெளியேறும் சுக்கிலப் பாயத்தில் பல இலட்சக்கணக்கான விந்துக்கள் காணப்படும். இருப்பினும் ,பொதுவாக ஒரு விந்து மாத்திரமே ஒரு முட்டையுடன் இணைந்து கருவாகின்றது.

முட்டைகள்,பெண்ணின் அடி வயிற்றுப் பகுதியில் உள்ள சூலகங்களில் காணப்படுகின்றன. குறிப்பாக வேறுபட்ட வளர்ச்சி,முதிர்ச்சி நிலைகளில் காணப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் நடைபெறுகின்ற மாதவிடாய்ச் சக்கரத்தில் இந்த முட்டைகள் விருத்தியடைந்து, இறுதியில் ஒரு முட்டை பூரணமாக விருத்தியடைந்து, பொதுவாக (அதாவது மாதவிடாய்ச் சக்கரம் ஒழுங்காகவரும் பெண்களில்) மாதவிடாய்ச் சக்கரத்தின் நடுப்பகுதியில் சூலகத்தை விட்டுவெளியேறும். (ovulation)

இந்த முட்டையானதுஅண்ணளவாக 24 மணித்தியாலம் உயிர்வாழக் கூடியது. உடல் உறவின் போது வெளியேற்றப்பட்டவிந்தானதுபெண் இனப் பெருக்கத் தொகுதியினுள் அண்ணளவாக 24-48 மணித்தியாலங்கள் உயிர்வாழும். வெளியேற்றப்பட்ட முட்டையானது பலோப்பியன் குழாயின் உதவியுடன் அந்தக்குழாயினுள் செல்லும் போதுஅதுவிந்தைச் சந்தித்துகருக்கட்டல் நடைபெறுகின்றது.

(fertilization) இதற்கு மேலதிகமாக,மாதவிடாய்ச் சக்கரத்தின் போது சுரக்கப்படும் பெண் இனப்பெருக்கத் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட சுரப்புக்கள் , கருப்பைக் கழுத்து , கருப்பைக் கழுத்துக் கால்வாய், யோனிவழி என்பவற்றை கருக்கட்டலுக்கும் ,விந்து அசைந்து செல்வதற்கும் சாதகமாகின்றன. எனவேதான் ,பொதுவாகமுட்டைவெளியேறும் காலப்பகுதிகளில் பெண்களுக்கு வெள்ளைபடுதல் ஏற்படுகின்றது. கருக்கட்டப்பட்ட முட்டையானது,கருப்பைக் குழாயின் ஊடாக கருப்பையை நோக்கி நகரும் போது பல கலப்பிரிவுகள் நடைபெற்று பலகலங்கள், உருவான கருவாக 3-4 நாட்களில் கருப்பையை அடைந்து, அங்கு கருப்பைச் சுவரில் முதிர்ந்த கருவாக (Blastocyst) உட்பதிகின்றது.(Implantation)

உட்பதிக்கப்பட்டகருவினால் சுரக்கப்படும் சுரப்புக்கள் ,ஹோமோன்கள் கர்ப்பப்பை உட்சுவரில் மாற்றங்களை ஏற்படுத்தி,கரு மேலும் வளர்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் ,அத்துடன் மாதவிடாய் ஏற்படாது. எனவேதான் கர்ப்பமான பெண்களில் மாதவிடாய் ஏற்படாது. மேலும் மாதவிடாய் பின்போகும் பட்சத்தில் பெண்களின் சிறுநீரைச் சோதித்துப் பார்த்து கர்ப்பத்தை உறுதிப்படுத்தலாம். (urien HCG)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 21.05.1953

உதிர்வு 13.08.2021



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி காமினி ஜெயராசா அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி புஸ்பராணி சின்னராசா

அவர்கள் நேற்று (13.08.2021) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தியுள்ளார். அன்னாரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்

யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 04 . 1926

மறைவு 15 . 08 . 2010

## முருகேசு சண்முகம்

திதி : பூர்வபக்க ஷஷ்டி

பதியன்பு கொண்டவரே ஐயா  
- ஆண்டு  
பதினொன்று ஆனதே மெய்யா  
விதியென்று விடுவதோ ஐயா  
- என்றும்  
விதிவெல்ல மதிதரவேண்டும் ஐயா  
கதியென்றும் தருவான் கந்தன்  
- அவன்  
கழலடி நிழலில் இருந்து எமக்கு  
அதியருள் தருவீர் ஐயா  
- என்றும்  
அதிலுமன்பே பெருகிடும் ஐயா.

57, மருதடி வீதி,  
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

69 ஆவது இரத்ததான முகாமை வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளரும், சிறந்த சமூக சேவையாளருமான மறைந்த

## அமரர் கோ.கருணானந்தராசா

அவர்களுக்கு

சமர்ப்பணம் செய்கின்றோம்.



வல்வெட்டித்துறை பிரதேச நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டிலும் முன்னாள் குருதிக்கொடையாளர்களின் அனுசரணையிலும் நாளை (15.08.2021) ஞாயிற்றுக்கிமை காலை 9.00 மணிக்கு வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையின் சிகிச்சை நிலையத்தில் தற்கால சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெறும் 69வது இரத்ததான முகாம் மறைந்த சிறந்த சமூக சேவையாளரும் வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளருமான அமரர் கோ.கருணானந்தராசா அவர்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றோம்.

வல்வெட்டித்துறை  
பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கமும்  
முன்னாள் குருதிக்கொடையாளர்கள் சமூகமும்.

# வேலை ஆட்கள் தேவை

எலக்ரீசியன், பிளம்பர் வேலை ஆட்கள் தேவை. இன்று (14.08.2021) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

இல. 392/6 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.  
(கைலாசப்பிள்ளையார் கோவிலடி சந்திக்கு அருகாமை)

# வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு செங்கல்கட்டு வேலையில் நன்கு அனுபவமுள்ள மேசன் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யக்கூடிய மேசன், கூலியாட்கள், Waiterbase வேலை தெரிந்த பெயின்ரர் (Painter) தேவை.

தொடர்புக்கு: 076 3165 734

# தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள கணிய அளவையாளர் (Quantity Surveyor) தேவை. AUTOCAD தெரிந்தவர்கள் விரும்பதக்கது.

தொடர்புக்கு: 076 3165 734

# நாய்க்குட்டி விற்பனைக்கு

GERMAN SHEPEED நாய் குட்டிகள் 35 நாட்கள், விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 251 6160

# மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 43 வயது , மகம் நட்சத்திரம் A/L படித்த 4 வருடம் சங்கீதம் கற்ற பெண்ணுக்கு தனியார்துறை அல்லது அரச தொழில் விரும்பத்தக்கது. விவாகரத்து, தாரம் இழந்தவர் விண்ணப்பிக்கலாம்.

071 684 8191 (Whatsapp)  
075 476 9477

# வேலையாட்கள் தேவை

மீசாலை புத்தூர் சந்தியில் இயங்கும் மின் ஒட்டு தொழிலகத்திற்கு (Nimal welding work shop ) அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடனடியாகத் தேவை. தங்கி வேலை செய்வதாயின் வசதிகள் செய்து தரப்படும்.

077 345 6552.

# தேவை

## பொதி செய்பவர்

யாழ்நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பொதி செய்பவர் தேவை. வயதெல்லை 21 - 30 இற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல.: J/F 1029  
மே / பா உதயன்  
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

மண்ணில் 29 . 05 . 1935

விண்ணில் 09 . 08 . 2021



## திருமதி புவனேஸ்வரி சிற்றம்பலம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி சிற்றம்பலம் கடந்த 09.08.2021 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், மனோதத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி காலஞ்சென்ற ஆறுமுகம் சிற்றம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதி களின் மருமகளும், காலஞ்சென்ற யோகீஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரன், நகுலேஸ்வரன், கணேஸ்வரன், கேதீஸ்வரன், தயாழினி ஆகியோரின் அன்புத் தாயும், புஸ்பலதா, ஜோன், கலைவாணி, சுகந்தி, பற், டேவிட் ஆகியோரின் அன்பு மாமியும், வாசுரி, கோபி, லக்சுமி, ஜேக், கனா, அபிராமி, கியரன், கேலன், மாலன், கயா, தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான திருமதி சீவரட்ணம், தாமோதரம்பிள்ளை, பொன்னுத்துரை, வீரசிங்கம், முத்துக்குமாரசாமி, விபுலானந்தன் மற்றும் தருமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடராசா, குமாரசாமி, பாலசிங்கம், சிவகுரு, கனகசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சரஸ்வதி, மாணிக்கம், சிவசோதி, அலிஸ்நோனா மற்றும் ஹேமலதா, அனந்தலட்சுமி, நீற்றா, சீலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

| | |
|---|---|
| புஸ்பலதா | - + 442 0801 49379 |
| ஜெகதீஸ்வரன் | - + 442 0836 49269 |
| நகுலேஸ்வரன் | - + 447 7707 31534 |
| கணேஸ்வரன் | - + 447 9048 93693 |
| தயாழினி | - + 447 9059 52547 |

தகவல்:  
சகோதரன் - ப.தருமலிங்கம்  
262 /3, கொழும்புத்துறை வீதி,  
யாழ்ப்பாணம்.

# மாநகர ஆணையாளர் உட்பட ஐவருக்கு நேற்று கொரோனா

மட்டக்களப்பு, ஒக. 14

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் உட்பட மேலும் ஐவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையில் கடந்த மூன்று தினங்களாக நோயாளர்கள் இனங்காணப் பட்டுவரும் நிலையில் மாநகரசபை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இந்தநிலையில், நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் உட்பட மாநகர சபையில் கடமையாற்றும் 05 பேர் கொரோனா நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (கு)

# பிரதமரைப் பதவி விலகக்கோரி தாய்லாந்து மக்கள் போராட்டம்

தாய்லாந்தில் பிரதமரைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி பல்லாயிரக் கணக்கானோர் தலைநகர் பாங்கொக்கில் போராட்டம் நடத்தி வருகின்றனர். கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை உரிய முறையில் கையாளவில்லை என்று வலியுறுத்தியே மக்களால் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. சுமார் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஓரிடத்தில் ஒன்றுதிரண்ட இந்தப் போராட்டத்தால் கொரோனாத் தொற்று மேலும் மோசமாக வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தாய்லாந்தில் இதுவரை 8 லட்சத்து 16 ஆயிரத்து 989 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 6 ஆயிரத்து 588 பேர் தொற்றால் உயிரிழந்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 10 . 1949



இறப்பு
13 . 08 . 2021

## திருமதி சோமசுந்தர ஐயர் பாலாம்பிகை

பருத்தித்துறை தும்பளை பிராமண தெருவை வசிப்பிடமாகக் கொண்ட திரு.சோமசுந்தர ஐயர் அவர்களின் அன்பு மனைவி திருமதி சோமசுந்தர ஐயர் பாலாம்பிகை அவர்கள் நேற்று (13.08.2021) காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் அமரர் சுப்பிரமணியக் குருக்கள், அமரர் அமிர்தேஸ்வரி அம்மா அவர்களின் அன்புமகளும், அமரர் சோமசுந்தர ஐயர் அவர்களின் அன்பு மனைவியும், மா.மனோகரி, பா.புஷ்பஹரி, சோ.துஷ்யந்த குருக்கள், சோ.ஜெயந்தக் குருக்கள் ஆகியோரின் அன்புத் தாயாரும், வி.மனோகரன், து.திருமகள் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ம.சாருஜன், ம.கஜன், ம.விஷாலி, பா.நிதூஷன், து.ஜிரோஜினி, து.கம்சிகா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2021) சனிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு நடைபெற்று, கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 7270 257**
**077 1312 985**

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 12 . 1947



மறைவு
12 . 08 . 2021

## திருமதி சிவஞானசுந்தரம் புவனேஸ்வரி

அல்வாய் வடக்கு வீரபத்திரர் கோவிலடி "திருப்பதியை" பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானசுந்தரம் புவனேஸ்வரி அவர்கள் 12.08.2021 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சின்னக்குஞ்சு தம்பதியரின் அன்பு மருமகளும், சிவஞானசுந்தரம் (சின்னமணி) அவர்களின் பாசமிகு மனைவியும், மனோரஞ்சிதம், அருஞ்செல்வம், செல்வானந்தன் (சுவிஸ்), கமலாதேவி (இத்தாலி), புஸ்பராணி (ஜேர்மனி), செல்வமலர் (கனடா), சச்சிதானந்தன் (சுவிஸ்), விஜயராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவஞானவதி மற்றும் மதிவாணன் (லண்டன்), சிவரஞ்சன் (இலண்டன்), பாஸ்கரன், சுரேஸ்குமார், சிவதீபன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்பழகன், சிவச்செல்வி, கனீபா, ஜெயா, மனோதினி, நர்மதா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பரஞ்சோதி, மனோன்மணி, சண்முகலிங்கம், ரவிதமலர், தர்மராசா, பிறேமாவதி, வாகீஸ்வரன், கமலநாதன், தனுஷா, ஜீவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அஜித்தன் (சுவிஸ்), அபிலா, அனோதன், மதுஷாந்த், துஸ் யந்தன், யதுவாணன், கீர்த்திகன், சயீனா, மதுஷா, சுயீனா, சுயின், விசாவி, விசாகன், மனாவதி, கெஜீபன், சுஜீவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"திருப்பதி"**
**வீரபத்திரர் கோவிலடி,**
**அல்வாய் வடக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**076 043 2252**

## தோட்டக்காணி விற்பனைக்கு

சரவணை இறை "வடலிக்குட்டி வெள்ளடை" எனுமிடத்தில் நிலப்பரப்பு 13 குளி 7 அமைந்த தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புக்கு: **077 255 0807**

# மரண அறிவித்தல்



## நவரத்தினம் இராசம்மா

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும், பங்களா லேன் மல்லாகத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் இராசம்மா அவர்கள் நேற்று (13.08.2021) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும், வண்ணமலர், பரமேஸ்வரி, மகாராஜா, வரதலட்சுமி, தேவராசா, பத்மாவதி, தவராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2021) மு.ப. 10.00 மணியளவில் பங்களா லேன் மல்லாகத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பங்களா லேன்,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 383 5499**

# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்!

மணிலா, ஓக. 14
பிலிப்பைன்ஸின் தென்கிழக்குக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.1 அலகுகளாகப் பதிவானது. ரிச்டர் அளவுகோலில் பதிவான 7.1எனும் அலகு அச்சப்படும் வகையில் இருந்தாலும், இந்த நிலடுக்கத்தால் உயிரிழப்புக்களோ அல்லது பொருட்சேதமோ ஏற்படவில்லை. அத்துடன் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.
(ம)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம்**
**26.03.1950**

**மறைவு**
**15.07.2021**

எமது கழகத்தின் உறுப்பினராகிய வைத்திய கலாநிதி இராசேந்திரா சுரேந்திரகுமாரன் (சமுதாய வைத்திய நிபுணர், சிரேஸ்ட விரிவுரையாளர் - மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.) அவர்களின் பாசமிகு தாயார்.

## திருமதி
## இரத்தினேஸ்வரி இராசேந்திரா


அவர்கள் கடந்த (15.07.2021) அன்று யாழ்ப்பாணத்தில் இறைபதம் அடைந்தமையறிந்து எமது கழக உறுப்பினர்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர். அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கு பேரிழப்பாகும். 31ஆம் நாள் நினைவு நாளில் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**தலைவரும், கழக உறுப்பினர்களும்,**
**அரிமா கழகம்,**
**வட்டுக்கோட்டை.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அப்புக்குட்டி சற்குணராசா

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே**
**என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**
**(யோவான் 11:25)**



**தோற்றம்**
**17.10.1962**

**மறைவு**
**14.08.2020**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்
மங்காத உன் நினைவால்
மயங்கியே நிற்கின்றோம்.

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும் பாசத்தின் உறைவிடமாகவும்
எம்மத்தியில் அன்பு ஒளியாக இருந்த உத்தமரே!!
மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை.
அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா இறைபதம்
சேர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஆமென்

**077 104 3101**

**நினைவுகளுடன்...**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர்

## கூறுகின்றார் அமைச்சர் தினேஷ்



**கொழும்பு, ஓக. 14**

**இலங்கையில் போரின்போது காணாமல் ஆக்கப்பட்டனர் என்று கூறப்படுவோரில் பலர் வேறு பெயர்களில் வெளிநாடுகளில் வசிக்கின்றனர் என தகவல்கள் கிடைத்துள்ளன." என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

இறுதிக்கட்ட போரின்போது அவர்கள் முறையற்ற வழிகளின் ஊடாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளாரென 'த ஐலண்ட்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"காணாமல் ஆக்கப்பட்டனர் என்று கூறப்படுவோரில் நூற்றுக்கணக்கான நபர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை நிரூபிக்க எம்மிடம் அறிக்கைகள் உள்ளன. அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளிடமிருந்து நாம் தகவல்களைக் கோரியுள்ளோம். எனினும், சில நாடுகள் அந்தத் தகவல்களை வழங்க மறுத்துள்ளன.

இலங்கைப் போருடன் தொடர்புடைய பரஸ்பர ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட நாடுகள் மட்டுமே அந்த விவரங்களை சட்டபூர்வமாக வழங்க முடியும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் தொடர்ந்தும் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. ஆனால், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இப்போது அவ்வாறு கேள்வி எழுப்பும் அமைப்புகளுடன் தொடர்புடைய நாடுகளிலேயே வாழ்கின்றனர்.

எங்களுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை இல்லை என்பதை சர்வதேச அமைப்புகளை நம்ப வைக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எனினும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுச் சான்றிதழ்களை வழங்க அரசு ஏற்கனவே முன்வந்துள்ளது. ஆனால், உறவினர்கள் அதனை ஏற்க மறுத்துள்ளனர்.

அத்தோடு தமது உறவுகள் எங்கே, அவர்கள் இறந்துவிட்டார்களா? அல்லது உயிருடன் இருக்கிறார்களா? என்று விசாரிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை. அதேவேளை, அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று அரசு கருதவும் முடியாது. எனவே, அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களைக் கொடுக்க முடியாது. 1988ஆம் ஆண்டில் காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் சிலர், சமீப ஆண்டுகளில் வீடு திரும்பினர் எனக் கூறப்படுகின்றது. நாங்கள் அவர்களின் இறப்புச் சான்றிதழ்களை வழங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும்?" என்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கேள்வி எழுப்பியுள்ளார். (த-22)

# சுகாதார பரிசோதகருக்கு எதிராக அத்தியட்சகர் பொலிஸில் முறையீடு

யாழ்ப்பாணம், ஓக. 14

பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு எதிராக ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சககர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் ஊழியர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்றும் கொரோனா தொற்று பரவும் சூழலை ஏற்படுத்தினார் என்று பொதுச் சுகாதார பரிசோதகர் மீது குற்றம்சாட்டியே ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமது மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவரை தீவிர தன்மை குறைந்த தொற்றாளர் என்ற அடிப்படையில் நாவற்குழி இடைத்தங்கல் முகாமுக்கு நேற்றுமுன்தினம் மாற்ற தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில், அல்லைப்பிட்டி பிரதேச பொது சுகாதார பரிசோதகர் என்று தன்னை அறிமுகப்படுத்தியவர் சீருடை இன்றி மருத்துவமனைக்குள் பிரவேசித்து நோயாளர் அவசர சிகிச்சைப் பிரிவில் பலமுறை நுழைந்து அந்த நோயாளியை இடைத்தங்கல் முகாமுக்கு மாற்ற வேண்டாம் என்று கூறியுள்ளார். மருத்துவமனை சிற்றூழியர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். நோயாளியின் மகனையும் தன்னுடன் அழைத்துவந்து தொற்று பரவும் சூழலை ஏற்படுத்தினார் என்று முறைப்பாட்டில் அத்தியட்சகர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் உடனடியாக விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன், கொரோனா பரவல் தன்மையை கட்டுப்படுத்த உதவுவதுடன், மருத்துவமனை ஊழியர்கள் பணிபுரிவதற்கான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த ஆவன செய்யுமாறும் அத்தியட்சகர் முறைப்பாட்டில் கோரியுள்ளார். இது குறித்து பொதுச் சுகாதார பரிசோதகரின் கருத்தைப் பெறமுடியவில்லை. (த)

# கைக்குண்டு கொண்டுசென்றாரென முன்னாள் போராளி நேற்றுக் கைது

கொழும்பு, ஓக. 14

அம்பாறை திருக்கோவில் பகுதியிலிருந்து மட்டக்களப்பு காத்தான்குடி பகுதிக்கு கைக்குண்டு ஒன்றை விற்பனைக்கு கொண்டுசென்றார் என்ற குற்றச்சாட்டில், விநாயகபுரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை களுவாஞ்சிக்குடி நகர்பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் நேற்றுக் கைதுசெய்தனர்.

கடற்படை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து விசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினர் அவரை கண்காணித்து வந்த நிலையில் குறித்த நபர் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் கைக்குண்டு ஒன்றை எடுத்துக் கொண்டு சென்றுள்ளார். அவரை புலனாய்வாளர்கள் பின்தொடர்ந்து சென்றுள்ளனர். கைக்குண்டை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கும் பொலிஸ் விடுதிக்கும் இடையிலான பிரதான வீதியில் புலனாய்வு பிரிவினர் பின் தொடர்வதை அவதானித்த அந்த நபர், கைக்குண்டை அந்த பகுதியில் வீசி விட்டு தப்பியோட முயற்சித்தபோது விசேட அதிரடிப்படையினரும் புலனாய்வு பிரிவினரும் சுற்றிவளைத்து கைதுசெய்தனர் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (த-இ)

### அரசுக்கு....

மாற்ற வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் வகையிலும் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை வீடுகளுக்கு முன்னால் கறுப்புக் கொடி ஏற்றுமாறு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மக்களிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிரித்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக்குழு நியமிக்கப்பட்டமை சர்ச்சைக்குரிய காரணியாகும். தனிக்கட்சியொன்றின் உறுப்பினர்களே உப குழுவில் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் அரசியல் பின்னணி கொண்டவர்கள். எனவே, ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு மேலாக குறித்த குழு நியமிக்கப்பட்டதை அனுமதிக்க முடியாது. அதேபோல ஜனாதிபதிக்கு நாம் அறிக்கையொன்றை அனுப்பியிருந்தோம். அதற்கு வழங்கப்பட்ட பதிலும் திருப்திகரமாக இல்லை. அதனை நிராகரிக்கின்றோம். தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் பிரகாரம் நீதி கிடைக்குமா என்ற சந்தேகமும் மேலோங்கியுள்ளது.

அதேவேளை, இராணுவப் புலனாய்வுப்பிரிவுக்கும், சஹ்ரான் குழுவினருக்கும் இடையில் அன்று சிற்சில கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. இவை என்ன என்ற வினா எழுகின்றது. ஆமி மொய்தீன் ஊடாக இடம்பெற்ற அந்த கொடுக்கல் வாங்கல்கள் என்ன? இது தொடர்பில் விசாரணை இடம்பெற்றதா? வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொல்லப்பட்டனர். இதன் பின்னணி குறித்து சரிவர விசாரணை நடத்தப்பட்டதா? அத்துடன் 'சொனிக்' என்ற அரச புலனாய்வுப் பிரிவு அதிகாரி மாத்தளை சஹ்ரான் என்பவரைப் பயன்படுத்தி, இந்தோனேசியாவுக்கு அழைப்பை ஏற்படுத்தி தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்குமாறு ஐ.எஸ். அமைப்பிடம் கோரியது ஏன்? தாக்குதலின் பின்னணியில் செயற்பட்ட உண்மையான நபர்களை பாதுகாப்பதற்காகவா இவ்வாறு ஐ.எஸ். அமைப்பினரை தொடர்பு கொண்டனர்?

தாஜ் சமுத்திரா ஹொட்டலுக்கு தாக்குதல் நடத்தச் சென்ற தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்பைபேணிய இராணுவ புலனாய்வுப்பிரிவு அதிகாரி யார்? இவை தொடர்பில் ஆராயப்பட்டதா?

இவ்வாறு அடி முதல் முடிவரை எல்லாம் ஆராயப்பட்டு அனைவரும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். நெத்திலி மீன்களை பிடித்துவிட்டு சுறாக்களை தப்பிக்க இடமளிக்கமுடியாது. அவ்வாறானதொரு முயற்சியா இடம்பெறுகின்றது என்ற சந்தேகம் எழுகின்றது. எது எப்படி இருந்தாலும் நீதி கிடைக்கும்வரை நாம் ஓயமாட்டோம்.

தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மூடிமறைக்கப்படக்கூடாது. உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கும், மக்களின் மனநிலையை புரிந்துகொண்டு அரசு நேர்வழியில் பயணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாகவும், மக்களுக்கான ஆட்சியை நடத்துமாறு அழுத்தம் கொடுத்தும் எதிர்வரும் 21 ஆம் திகதி வீடுகள், வியாபார நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் ஆன்மீக நிலையங்களில் கறுப்புக்கொடி ஏற்றுவோம். அதேவேளை, தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேசத்தை நாடுவது உறுதி. பாப்பரசருக்கு இது தொடர்பில் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது." என்றார். (த-44)

### எம்மை....

ரிய சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாம் கடந்த 5ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, இந்தவிடயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தர தெரிவித்திருந்தார். இரண்டு வாரங்களில் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதாகவும் அவர் கூறினார். அந்த ஆணைக்குழு இருக்கின்றதா? இல்லையா? என்று கேட்கின்றோம்.

அந்த ஆணைக்குழு இல்லையாயின் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக இருக்கும் ஒரு குழு இந்த அமைச்சரவை உபகுழுதான்.

சுமார் 2 இலட்சத்து 47 ஆயிரம் ஆசிரியர்கள் தெளிவான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டம் இன்று 32ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்தக் குழுவினூடாக எதிர்வரும் திங்கட்கிழமை அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்போம் என்று அமைச்சரவை உபகுழுவை நியமிக்கும்போது ஊடகங்கள் வாயிலாக அரச தரப்பினர் எமக்குத் தெரிவித்தனர். சகல தொழிற்சங்கங்களையும் வெவ்வேறாக சந்தித்து ஒரு தீர்மானத்தை எடுப்பதாகக் குறித்த உபகுழு நேற்று கூறியிருந்தது. இந்த நீண்டகால செயற்பாடு அவசியமா எனக் கேள்வி கேட்க விளைகின்றேன்.

சுபோதினி குழு அறிக்கையை செயற்படுத்துவதுடன் அதிபர், ஆசிரியர் சேவையை நிறைவு சேவையாக செயற்படுத்துவதே எமது கோரிக்கை. இது தொடர்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அமைச்சரவைப் பத்திரம் காணப்படுகின்றது. கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரம் உள்ளது. இந்த அமைச்சரவைப் பத்திரத்தைச் செயற்படுத்துவதற்குப் பதிலாகவே அமைச்சரவை உபகுழுவை நியமித்துள்ளனர். எனவே, இதனைக் காலம் தாழ்த்தும் செயற்பாடாக மாற்றுவதற்கு முயற்சித்தால் பெரும் பிரச்சினையாகவே இதனைக் கருத வேண்டி வரும்" என்றார். (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயியின் கடிகாரம்



ஒரு நாள் ஒரு விவசாயி தன் கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை மோட்டார் கொட்டகையில் தொலைத்து விட்டார்.
அது அவரது திருமணத்தின் போது மனைவி அவருக்கு ஆசையாக பரிசளித்த கைக்கடிகாரம். அவர் அந்த இடத்தை சுற்றி தேடி பார்த்துவிட்டார். அவருக்கு அந்த கைக்கடிகாரம் கிடைக்கவில்லை.
நிலத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தனர். அவர்களை அழைத்து, "என் கைகடிகாரம் தொலைந்துவிட்டது. அதை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு நல்ல பரிசு ஒன்று கொடுப்பேன்" என்றார். சிறுவர்கள் ஆர்வமுடன் மோட்டார் கொட்டகைக்குள் சென்று தேட ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் அவர்கள் வெளியே வந்து, "எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று சொல்லி விட்டு கிளம்பி விட்டனர்.
ஒரு சிறுவன் மட்டும் மீண்டும் வந்து, "எனக்கு இன்னொரு வாய்ப்பு கொடுங்கள். நான் தேடி தருகிறேன்" என்றான். விவசாயியும், "சரி! நீ போய் தேடிப்பார்" என்றார்.
மோட்டார் கொட்டகைக்குள் சென்ற சிறுவன் சிறிது நேரத்தில் கைகடிகாரத்துடன் வெளியே வந்தான்.
அதை பார்த்த விவசாயி ஆச்சரியத்துடன், "எப்படி உன்னால் மட்டும் கண்டுபிடிக்க முடிந்தது?" என்று கேட்டார்.
"நான் உள்ளே சென்று தரையில் அமைதியாக உட்கார்ந்து காதுகளை கூர்மையாக்கி கேட்டேன். எந்த திசையில் இருந்து டிக் டிக் சத்தம் வருகிறது என்று. பிறகு சுலபமாக கண்டுபிடித்து எடுத்து வந்தேன்" என்றான்.
**நீதி: அமைதியான மனநிலையில் எந்த ஒரு காரியத்தை செய்தாலும் அது வெற்றிகரமாக முடியும்....**

# விந்தை மனிதர்!



பேரறிஞர் ஜார்ஜ் பெர்னாட் ஷா. ஐரோப்பிய நாடான அயர்லாந்தை சேர்ந்தவர். ஆங்கிலப் பேரிலக்கிய படைப்புகளுக்காக, 1925ல் நோபல் பரிசுக்கு தேர்வு பெற்றார். அச்செய்தி, அன்று நள்ளிரவில், தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.
தகவல் தெரிவித்தவரிடம், 'பரிசு பெறுவது ஒரு சாதாரண விஷயம். அதற்காக, என் அருமையான உறக்கத்தை கெடுத்துவிட்டீரே…' என்று சிரித்தபடி கூறினார் ஷா.
மக்களின் சிந்தனையை மாற்ற, எழுத்தை ஆயுதமாக கொண்ட அவருக்கு, மாபெரும் பரிசு மிகச் சாதாரணமாக தெரிந்துள்ளது. அவர், ஐந்து நாவல்களும், 50க்கும் மேற்பட்ட நாடகங்களும் எழுதியுள்ளார். அவரது நகைச்சுவை மிகவும் பிரசித்தி பெற்றது.

# மீனைப் போல..!

ஆற்றில் குளத்தில்
அலை நடுவே
அழகாய் நீந்தும்
மீனைப் பார்!

போற்றித் தொழுகிற
கோயில் குளத்தில்
பொத்தென குதிக்கிற
அழகைப் பார்!
சேற்றில் மலர்ந்த
தாமரைப் போல
செக்கச் சிவந்த
நிறத்தைப் பார்!

கப்பல் போல நீந்தும்
அழகினை
கண்கள் நிறைய
பருகிப் பார்!
எப்பொழுதும் நீ
சுறுசுறுப்போடு
மீனைப் போல
மாறிப் பார்!



# சிங்கம்




கவரும் பிடரியும், கம்பீர கர்ஜனையும் கொண்டது. இதன் பாதுகாப்பை வலியுறுத்தி, ஆகஸ்ட் 10, உலக சிங்க தினமாக கடைபிடிக்கப்படுகிறது. உலகில், 15 நாடுகள், சிங்கத்தை தேசிய விலங்காக பெருமை கொண்டாடுகின்றன. சராசரியாக மணிக்கு, 81 கி.மீ., வேகத்தில் ஓடும். அதிவேக வேட்டை விலங்குகளில், முதலிடத்தை புலியும், இரண்டாம் இடத்தை சிங்கமும் பிடித்துள்ளன.
ஆண் சிங்கத்தின் கர்ஜனை, எட்டு கி.மீ., வரை கேட்கும்.
மான், காட்டெருமை, வரிக்குதிரை, யானை, காண்டாமிருகம், நீர் யானை, காட்டுப்பன்றி, முதலை, ஒட்டகசிவிங்கி, முயல், ஆமை என இதன் உணவு பட்டியல் நீளமானது; உணவை வேகமாக ஜீரணிக்கும்; ஐந்து நாட்கள் வரை நீர் குடிக்காமல் வாழும்
பெரும்பாலும், பெண் சிங்கமே வேட்டையாடும். உணவை முதலில் ஆணும் அடுத்து, பெண், குட்டி என கட்டுப்பாட்டுடன் உண்ணும்.
ஆண் சிங்கம், 250 கிலோ வரை எடை இருக்கும்; ஆயுள், 13 ஆண்டுகள். பெண், 150 கிலோ வரை இருக்கும்; ஆயுள், 16 ஆண்டுகள்.
சிங்கத்தில், 11 சிற்றினங்கள் உண்டு. அவற்றில், ஐந்து அழிந்து விட்டன. தற்போதுள்ளவற்றை, ஆசிய, ஆப்ரிக்க சிங்கங்கள் என வகைப்படுத்தலாம்.
ஆப்பிரிக்காவில் கட்டங்கா, காங்கோ, டிரான்ஸ்வால், கிழக்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்க சிங்கம் என்ற வகைகள் உள்ளன. ஆசிய சிங்கம் அளவில் சிறியது. அமெரிக்காவில் அழிந்துபோன இனமே, உலகில் மிகப்பெரியதாக கருதப்படுகிறது. இன்றுள்ளதில் மிகப்பெரியது கட்டங்கா சிங்கம்.
இன்று ஆப்பிரிக்காவில், 28 நாடுகளில், 20 ஆயிரம் சிங்கங்கள் உள்ளன. இந்தியா, குஜராத் கிர் காட்டில், தற்போது, 674 சிங்கங்கள் உள்ளன.
ஆண் சிங்கத்தை, அரிமா என்பர். தமிழ் அகராதியான சூடாமணி நிகண்டு, வயப்போத்து, சீயம், அறுகு, கேசரி, பூட்கை, மிருகராசன், வயமா, மடங்கல், கண்டீரவம், பஞ்சானனம் என சிங்கத்தின் பெயர்களாக குறிப்பிடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாடுகளும் நாணயங்களும்

1. இந்தியா - ரூபாய்
2. அமெரிக்கா- டொலர்
3. இங்கிலாந்து- பவுண்டு
4. கனடா- டொலர்
5. ஜப்பான்- யென்
6. சீனா- யுவான்
7. சவூதி அரேபியா- ரியால்
8. ஆஸ்திரேலியா- டொலர்
9. மலேசியா- ரிங்கிட்
10. பாகிஸ்தான்- ரூபாய்
11. இலங்கை- ரூபாய்
12. மியன்மார்- கியாத்

# இடைவெளி நிரப்புவோம்



## நாட்டை...

எனினும், இலங்கையில் அனைத்து மாகாணங்களுக்கும் இடையிலான பயணக் கட்டுப்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கொரோனாத் தடுப்புச் செயலணிக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதற்கமைய நேற்று நள்ளிவு முதல் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மாகாணங்களுக்கு இடையிலான முழு நேரப் பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கும் என்று கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி சுகாதாரம், துறைமுகம், சுற்றுலாத்துறை, ஆடைத்தொழிற்சாலை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடையவர்களுக்கு மாத்திரம் மாகாணங்களுக்கு இடையே பயணிக்க அனுமதி வழக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான பொதுப்போக்குவரத்து சேவைகள் நேற்று நள்ளிரவு முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்குப் பின்னர் பொது இடங்களுக்குச் செல்வோரிடம் தடுப்பூசி போட்டுக்கொண்டமைக்கான அட்டை பரிசோதிக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (த-22)

## அமைச்சருக்கும்...

மனையில் சிகிச்சை பெற்றுவரும் இராஜாங்க அமைச்சர், தன்னுடன் தொடர்பை பேணிய அனைவரும் சுயதனிமைப்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்.

இதற்கமைய, அவரின் பணிக்குழாமினரும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மங்கள சமரவீரவின் பணிக்குழாமினர் சிலருக்கு கொவிட் தொற்று உறுதியானதையடுத்து மங்கள சமரவீர தன்னை சுயதனிமைப்படுத்திக் கொண்டார். அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (த-இ)

## குளவி...

பவிக்குமார் (வயதுய 31) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். தென்னைமரத்தில் தேங்காய் பிடுங்கச்சென்ற சமயம் ஓலையில் இருந்த கருங்குளவிகள் அவருக்கு உடல் முழுவதும் கொட்டியுள்ளன. இதையறிந்த நண்பர்கள் காவோலை கொளுத்தி குளவிகளை கலைத்துவிட்டு அவரை மீட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்திருந்தனர். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் நேற்று விசாரணை மேற்கொண்டார். (த-26)

## மின்சாரம்...

வித்தனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

குருநகர் பகுதியை சேர்ந்த கோபு விஜித் (வயது 17) என்பவரே உயிரிழந்தவராவார். குறித்த சிறுவன் தனியார் கட்டட ஒப்பந்த காரரர் ஒருவரின் கீழ் வேலைக்கு சேர்ந்தார். புதிய கட்டடத்தில் மின் இணைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது, மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளான் என்று தெரிவிக்கப்படுகிறது. குறித்த சிறுவனுக்கு 17 வயது என்பதால் சிறுவனை வேலைக்கு அமர்த்தியது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சிறுவனின் பெற்றோரிடமும் வாக்குமூலம் பெற்றுள்ளனர். (த-8)

## நாட்டை முடக்கத்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இந்தியாவை விட 10 மடங்கு அதிகமாக இலங்கையில் இறப்புகள் பதிவாகலாம் என்ற அச்சுறுத்தல் உள்ளது. இது எண்ணிக்கையில் அல்ல, வீதத்தில் கணிக்கப்பட வேண்டும். இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்படி இந்தியாவை விட நான்கு மடங்கு வீதத்தால் கொரோனா இறப்புகள் அதிகரித்துள்ளன. அடுத்த மூன்று நான்கு வாரங்களில் இது மேலும் அதிகரிக்கும். எனவே, உடனடியாக நாட்டை முடக்கும் தீர்மானம் எடுத்து இறப்பு எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போதுள்ள நிலையில் தரவுகளுக்கு அமைய, நாளாந்தம் 600 இறப்புகள் பதிவாகலாம். ஆனால், மாற்றங்களை முன்னெடுத்தால் இறப்புகளைக் குறைக்க முடியும். எனினும், நாளாந்தம் 150 இறப்புகள் பதிவாகின்றமையைத் தடுக்க முடியாது. இதனைவிட அதிகரிக்க இடமளிக்கக்கூடாது என்பதையே நாம் கூறுகின்றோம். இதனால் நாட்டை முடக்கினாலும் அடுத்த இரண்டு வாரங்களின் பின்னரே நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியுமாக இருக்கும்" என்றார். (த-22)

## தொற்றாளர்...

யொருவரும் இதன் பின்னணியில் செயற்பட்டுள்ளனர் என்று அரச பங்காளிக்கட்சியான தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு அந்தக்கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது. அதில் கட்சியின் ஊடகப்பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸம்மில் தெரிவித்ததாவது:

கம்பஹா மாவட்டத்தில் சில நாள்களுக்குள் 12 ஆயிரத்து 555 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்று கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற கம்பஹா மாவட்ட செயலணிக் கூட்டத்தில் உறுதியானது. குறித்த தொற்றாளர்களில் 4 ஆயிரம் பேர் வரையிலேயே மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும், கம்பஹா மாவட்டத்தில் பதிவாகிய தொற்றாளர்கள் என சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட எண்ணிக்கையை கூட்டினால் 3 ஆயிரம்வரைதான் வருகின்றது. எனவே, யாரை ஏமாற்றுவதற்கு இங்கு முயற்சி எடுக்கப்படுகின்றது? திட்டமிட்ட அடிப்படையில் தரவுகள் மாற்றியமைக்கப்படுவது இதன்மூலம் உறுதியாகின்றது.

ஓகஸ்ட் 5 ஆம் திகதி 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். எனினும், 2 ஆயிரத்து 669 தொற்றாளர்கள் என்றுதான் அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதேபோல ஓகஸ்ட் 6 முதல் 11வரை நாளாந்தம் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. ஆனால் 3 ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் என்ற அடிப்படையிலேயே அறிவிப்பு வெளியாகியுள்ளது.

எனவே, கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்பான நாளாந்த தகவல்களை மாற்றியமைக்கும் நடவடிக்கை இடம்பெறுகின்றது என்பது உறுதியாகின்றது. ஆய்வுக்கூட பரிசோதனை முடிவுகள் குறிப்பிட்ட சிலரின் கைகளுக்கு மட்டுமே செல்லும் நிலைமை காணப்படுகிறது. யார் இவ்வாறு தவறான தகவல்களை வழங்குவது, அவர்களின் நோக்கம் என்ன?

சுகாதார அமைச்சின் விஞ்ஞான தொற்றுநோய் பிரிவின் விசேட மருத்துவர்கள் இருவரும், இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவருமே இந்த செயலில் ஈடுபட்டுள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது. இந்த இராணுவ அதிகாரி யாரென்பதை இராணுவத் தளபதி தேடிப்பார்க்க வேண்டும்.

கொரோனா ஒழிப்பு நடவடிக்கையை ஸ்தம்பிதமடைய செய்வதே அந்த மூவரினதும் நோக்கமாக உள்ளது. வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையில் தான் ஜனாதிபதி முடிவுகளை எடுக்கின்றார். எனவே, ஜனாதிபதியையும் தவறாக வழிநடத்துகின்றனர். ஆட்சியை ஸ்தம்பிதமடைய வைக்கவும், மக்களை பலிக்கடாவாக்குவதற்கும் இவ்வாறான நடவடிக்கைமூலம் முயற்சி எடுக்கப்படுகின்றது. எதிரணியின் தேவையை நிறைவேற்றும் பணியும் இடம்பெறுகின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைத்து, இறப்பு விகிதத்தை அதிகரித்து காண்பிக்கும் சூழ்ச்சித்திட்டமும் இதன் பின்னணியில் உள்ளது. எனவே, தொற்று நோயுடன் விளையாட முற்படும் இவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார். (த-44)

## கொவிட்...

பெண்ணொருவரே உயிரிழந்தவராவார். கடந்த மாதம் சாவகச்சேரி மருத்துவமனையில் மேற்கொண்ட பி.சி. ஆர். பரிசோதனையில் ஒரு குடும்பத்தைச்சேர்ந்த மூவருக்கு (தந்தை, தாய், மகன்) தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து மூவரும் அதே மருத்துவமனையின் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். கணவனும் மகனும் குணமடைந்தனர். அதனையடுத்து நேற்று முன்தினம் அவர்கள் வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டனர். எனினும், குடும்பப்பெண்ணுக்கு, நேற்றுமுன்தினம் இரவு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதைவிட, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கைதடியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவரும், கொழும்புத்துறையைச் சேர்ந்த 79 வயதுடைய ஒருவரும், புத்தூரைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும், ஏழாலை மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும், கோண்டாவிலைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரும் என 5 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 177ஆக உயர்வடைந்துள்ளது. (த-9,26)

## கொரோனா...

துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா இறப்புகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 775 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 155 பேரில் 85 ஆண்களும், 70 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 3 பெண்கள் 30 வயதுக்குட்பட்டவர்கள். 14 பெண்கள், 27 ஆண்கள் என 41 பேர் 30 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 111 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில், 53 பெண்களும், 58 ஆண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் நாளாந்த எண்ணிக்கை நேற்றும் 3 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்று 3 ஆயிரத்து 142 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 48 ஆயிரத்து 260ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 173 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 4 ஆயிரத்து 628 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## சுகாதார....

பகுதியைச்சேர்ந்த கே.விஜயகுமார் (வயது 46) என்பவரே உயிரிழந்தார். கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் பணியாற்றும் அவர், மதிய உணவுக்கு சென்றுவருகின்றேன் என்றுகூறிவிட்டு அலுவலகத்திலிருந்து சென்ற சிறிது நேரத்தில், வீதியில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் சுகாதாரத்தரப்பினர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவரது சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இன்று சடலத்தில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். (த-6)

## சுதேச....

இதுவரை ஆயிரத்து 33 படுக்கைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தற்போது 835 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் ஆயுள்வேத ஆணையாளர் தம்மிக அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். இந்தநிலையில், இதுவரையான காலப்பகுதியில் மூவாயிரத்து 820 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் இரண்டாயிரத்து 843 பேர், எந்தவித சிக்கல்களுமின்றி குணமடைந்துள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, 9 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில், தொற்றாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்குவதற்கு ஆயுள்வேத நிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுவோரை குணப்படுத்துவதற்காக, சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சால் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆயுள்வேத ஆணையாளர் தம்மிக அபேகுணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் தரப்படுத்தலில் கோலிக்கு பின்னடைவு



**லண்டன், ஓக. 14**

**சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் தரப் படுத்தல் பட்டியலில் இந்திய அணியின் தலைவர் கோலி ஐந்தாம் இடத்துக்குப் பின் தள்ளப்பட்டார்.**

ஆஸ்திரேலிய வீரர் சிமித்துடன் கடந்த வருடம் முதலாம் இடத்துக்குப் போட்டிபோட்டுக் கொண்டிருந்த கோலி தற்போது ஐந்தாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளமை அவரின் ரசிகர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 'கோல்டன் டக்' முறையில் வெளியேறினார் கோலி. இதையடுத்தே அவர் நான்காம் இடத்தில் இருந்து ஐந்தாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடங்களில் வில்லியம்சன் (901 புள்ளிகள்), சிமித் (891 புள்ளிகள்), லபுஸ்சேன் (878 புள்ளிகள்), ரூட் (846 புள்ளிகள்) ஆகியோர் உள்ளனர். கோலி 791 புள்ளிகளைப் பெற்றுள்ளார். (ம)




## இந்தியர்கள் என்னை எரித்தேயிருப்பார்கள்!

*சச்சினுடனான நினைவை பகிர்ந்த சொகைப் அக்தர்*

இஸ்லாமபாத், ஓக. 14

சச்சினை தான் தூக்கிவிழுத்திய சம்பவத்தை தற்போது மீண்டும் நினைவூட்டியுள்ள அக்தர், சச்சினுக்கு காயம் ஏற்பட்டிருந்தால் இந்தியர்கள் தன்னை எரித்திருப்பார்கள் என்று தெரிவித்துள்ளார்.

2007ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் ஆட்டமொன்றின் பின்னர் சச்சினுக்கு அந்த ஆட்டத்துக்கான விருதொன்று வழங்கப்பட்டது. சச்சினுடன் நல்ல நட்பில் இருந்த அக்தர் சச்சினை மகிழ்ச்சியில் தூக்கி நிலைதடுமாறி கீழே போட்டுவிட்டார். அது ஊடகங்களால் சில நாள்களாக ஊதிப் பெருப்பிக்கப்பட்டது. அது தொடர்பிலேயே இப்போது அக்தர் கருத்துப் பகிர்ந்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பாகிஸ்தானுக்குப்பின் எனக்கு அதிகமான அன்பையும், வரவேற்பையும் அளித்த நாடு இந்தியா தான். இந்தியப் பயணத்தின்போது மறக்க முடியாத பலநினைவுகள் இருக்கின்றன. கடந்த 2007ஆம் ஆண்டு பயணத்தின் போது, ஒரு போட்டியில் வென்றுவிட்டு விருது வழங்கும் விழாவுக்காக இருஅணிகளும் காத்திருந்தோம்.

வழக்கம்போல் நான் ஏதாவது வித்தியாசமாக செய்யவேண்டும் என நினைத்தேன். சச்சினுக்கு விருது கொடுத்தவுடன் திடீரென அவரைத் தூக்கினேன். இதை சச்சின் கூட எதிர்பார்க்கவில்லை. விளையாட்டுக்காகத் தூக்கினேன், ஆனால், என்னால் சமநிலை செய்ய முடியவில்லை. திடீரென கைகளை விட்டுவிட்டேன். சச்சின் தரையில் விழுந்தார்.

சச்சின் கீழே விழுந்ததைப் பார்த்தவுடன் எனக்கு இதயத்துடிப்பு எகிறியது. நான் செத்தேன், என்னை தொலைத்துக்கட்டப் போகிறார்கள் என மனதுக்குள் பயந்தேன்.

சச்சினுக்கு மட்டும் ஏதேனும் உள்காயம் ஏற்பட்டிருந்தால், நான் ஒருபோதும் இனிமேல் இந்தியா விசா பெற முடியாது. நிச்சயமாக இந்தியாவை விட்டு என்னை உயிரோடு இந்திய ரசிகர்கள் அனுப்பமாட்டார்கள் என அச்சப்பட்டேன். ஆனால், மருத்துவர் வந்து பரிசோதித்த பின் சச்சினுக்கு எந்த காயமும் இல்லை. நலமாக இருக்கிறார் எனத் தெரிவித்தபின்புதான் எனக்கு நிம்மதியாக இருந்தது - என்றார். (ம)

## பும்ரா பேரெழுச்சி!

லண்டன், ஓக. 14

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பும்ரா சர்வதேச டெஸ்ட் தரப்படுத்தலில் 10 இடங்கள் முன்னேறியுள்ளார். அவரின் புதிய தரப்படுத்தல் 9ஆவது இடமாக அமைந்துள்ளது.

நொட்டிங்ஹாமில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பும்ரா அற்புதமான பந்துவீச்சை வெளிப்படுத்தினார். இரு இன்னிங்ஸிலுமாகச் சேர்த்து 9 இலக்குகளை வீழ்த்தினார். இதையடுத்தே அவர் 19ஆவது இடத்தில் இருந்து 10 இடங்கள் முன்னேறி 9ஆவது இடத்துக்குச் சென்றுள்ளார். (ம)





## பயிற்சியாளர் பதவி விவகாரம் கங்குலி, சாஸ்திரி ஆலோசனை

புதுடில்லி, ஓக. 14

இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து ரவி சாஸ்திரி விலகவுள்ளார் என்று தெரிவிக்கப்படும் நிலையில், இது தொடர்பில் இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் கங்குலி மற்றும் ரவிசாஸ்திரி இருவரும் ஆலோசனை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்திய அணியின் பயிற்சியாளராக உள்ள ரவிசாஸ்திரி ரி20 உலகக்கிண்ணத்துடன் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகுகின்றார். இதனால் ராகுல் ராவிட் இந்திய தேசிய அணிக்குப் பயிற்சியாளராக விரைவில் பொறுப்பேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் இது தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் இருந்து எந்த அறிவித்தலும் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை. இத்தகையதொரு பின்னணியில் கங்குலியும் ரவிசாஸ்திரியும் பேச்சு நடத்தியுள்ளமை பரபரப்பாகியுள்ளது. (ம)

# யு.ஏ.இ புறப்பட்டது மும்பை இந்தியன்ஸ்

டுபாய், ஓக. 14

ஐ.பி.எல் தொடரின் இரண்டாவது பாதியில் பங்கெடுப்பதற்காக மும்பை இந்தியன்ஸ் அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ளது.



இந்தியாவில் கடந்த ஏப்ரல் மாதம் ஐ.பி.எல் தொடர் நடைபெற்றது. எனினும் கொரோனாத் தொற்று வீரர்களின் பயோ பபுள் வளையத்துக்குள் ஊடுருவியதால் தொடர் இடைநடுவே கைவிடப்பட்டது.

இந்த நிலையில் ஐ.பி.எல் தொடரின் எஞ்சிய ஆட்டங்களை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவெ டுத்துள்ளது. அடுத்த மாதம் 19ஆம் திகதி சென்னை - மும்பை இடையிலான ஆட்டத்துடன் தொடரின் இரண்டாவது பகுதி ஆரம்பிக்கின்றது. இந்த நிலையில் இந்தத் தொடருக்கான மும்பை அணி நேற்று இந்தியாவில் இருந்து புறப்பட்டு ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றது. மும்பை அணியின் முக்கிய வீரர்களான ரோகித், சூரியகுமார் ஆகியோர் இங்கிலாந்து இந்தியா இடையிலான டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றனர். அவர்கள் தாமதமாக அணியுடன் இணைவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

**IELTS New Batch**
Spoken with Grammar தனிப்பட்டதும், குழு வகுப்புக்கள் ஆரம்பம்.
**Cont:0777 989830**
53. சிவகுருநாதர் வீதி. Brown Rd.

**வீடு விற்பனை**
வன்னிய சிங்கம் வீதி. கொல்லன்கலட்டி தெல்லிப்பளையில் 5 அறைகள் 2 கோல். சமையலறையுடன் கூடிய வீடு 2¼ பரப்பில் விற்பனைக்கு உள்ளது. ஆர்வமுடையோர் நேரில் வரவும்.
**தொடர்பு 077 672 7073**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14. 08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.